T. 880.

115
8.80

உ

சிவமயம்

# சைவ சித்தாந்த ஆராய்ச்சி

## உயிரின் தன்மை

## அஷ்ட மூர்த்தம்

T.880

ஜே. யேம். நல்லசாமி பிள்ளை, B. A., B. L,

அவர்களால் இயற்றியது

மதுரைத் தமிழ்ச்சங்கம் பவர் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது

1915

இதன் விலை] Registered [அணா 2

உ

# உயிரின் தன்மை.

## (பசுலக்ஷணம்.)

—:o( )o:—

இவ்வியல்பின் பூர்வபக்ஷத்தைச் சித்தாந்தநூல்கள் அதிகமாக விரித்துக்கூறும். சிவஞானபோதம், சிவஞானசித்தியார் மூன்றும் நான்காம் சூத்திரங்களிலும், பின்னையநூலின் உலகாயதன்மதம் பௌத்தமதம், சமணமதம் முதலியவைகளின் பரபக்ஷத்திலும் இதன்விரிவைக் காணலாம். சிவப்பிரகாசத்திலும் உண்மையதிகாரத்திற் பேசப்பட்டிருக்கின்றது. அவைகளைத் தொகுத்துக்கூறுமிடத்து உயிர் பூதமல்ல, பொறியல்ல, கரணங்களல்ல, பிராணனல்ல, உடலல்ல, இவைகளின்கூட்டமல்ல, கடவுளல்ல, வெறும் அறிவுமல்ல, அறியாமையுமல்ல, உருவல்ல, அருவல்ல, உருவருவல்ல, தூலமுமல்ல, சூக்குமமுமல்ல, செயலற்றதுமல்ல, செயலுள்ளதுமல்ல, அணுவுமல்ல, விபுவுமல்ல என்பதே.

ஆயின் இதனுண்மைதான் என்னவெனில், சிவஞானபோதம் 4-ம் சூத்திரம் 2-ம் அதிகரணம் உதாரணச்செய்யுளில், 'அதுவதுவாதல்' என்றும், 3-ம் அதிகரணத்தில் 'அரூபசொரூபியாய்' நிற்கின்றதென்றும், 5-ம் சூத்திரம், 1-ம் அதிகரணத்தில் "அவற்றின் (ஐம்பொறியின்) ஆன்மா ஒற்றித்துக்காணினல்லது அவையொன்றையும் விடயியாவாகலான்" என்றும், 2-ம் அதிகரணத்து, 'தமதுமுதலாலேயுணரும்' என்றும், 8-ம் சூ. 3-ம் அ. "அவைதாம் பளிங்கிலிட்டவன்னம்போல் காட்டிற்றைக்காட்டிநிற்றலான்" என்றும், உதாரணச்செய்யுளில் 'பன்னிறமேகாட்டும்படிகம்போல்' என்றும்,

சித்தியாரில், சுபக்கம், 4-ம் சூ. 20-ம் செய்யுளில்,

"அசித்தருவியாபகம்போல்வியாபகமருவமன்றாய்
வசித்திடவரும்வியாபியெனும்வழக்குடையணுகி
நசித்திடாஞானச்செய்தியநாதியேமறைத்துநிற்கும்
பசுத்துவமுடையணுகிப்பசுவெனநிற்குமான்மா"

*

என்றும், 5-ம் சூ. 3-ம் செய்யுளில் "அறிவிக்கஅறிவன்" என்றும், பரபக்ஷம் உலகாயதன்மதமறுதலை 20-ம் செய்யுளில்,

"அங்கியானதுதானுமொன்றையணைந்துநின்றுநிகழ்ந்திடும்
பங்கியாதுயிர்தானுமிப்படிபற்றியல்லதுநின்றிடா" என்றும்,

சிவப்பிரகாசம், உண்மை, 5-ம் செய்யுளில் 'அதுவதுவாகக் காணும்' என்றும்,

திருவருட்பயனில், (2-ம் அதி 8-ம் செய்யுள்)

"இருளினிருளாகியெல்லிடத்தினெல்லாம்
பொருள்களிலதோபுவி"

என்றும் படிக்கப்படுகின்றன. இவற்றிற்காணப்படும், உயிரின் அதுவதுவாதற்றன்மையையும், பற்றின்றிநிற்றலாகாததன்மையையும் பற்றி இங்கு விரிக்கப்படும். இவற்றைப்பற்றி, இப்பொழுதுள்ள உரைகளில், ஒருவரும், அவ்வளவாய் விரித்துப்பேசவில்லை. சிவஞானமகாபாடியம், 6-ம் சூத்திரத்தின்கீழ், யோகிகள் இவ்வான்மாவின்குணத்தைப்பற்றி நமது அத்துவிதசித்தாந்தத்தை விளக்கியுள்ளார். உயிரின்குண மின்னதெனவே, பாசத்தோடும், பதியோடும் இன்னவிதசம்பந்தம்பெற்றிருக்கின்றதெனத் தெற்றென அறியலாம். ஆகையால் இவ்வாராய்ச்சியின்விசேஷமும் விளங்கும்.

மேல், அதுவதுவாதல் என்பதன்பொருள் சார்ந்ததன்வண்ணமாதல்; யாதொன்றுபற்றின் அதனியல்பாய்நிற்றல், அதாவது, உயிரின் உண்மையியல்பு யாதாயினும், இன்னொருபதார்த்தத்தோடு ஒற்றிநிற்கும்போது, தன்னியல்பு சுவதந்திரம் முதலியகெட்டு, எதனோடு சார்ந்ததோ அதன்சொரூபமடைந்து, தான் என்பதொன்றில்லாமல் முழுதும் மறைந்துநிற்றல். "இளமையும், வெண்கடுதாசியும் எல்லாப் பதிப்பையும் ஏற்கும்" என்னும் ஆங்கிலப்பழமொழிபோல், மனிதருடையமனத்தில் வெளியினின்று எதிர்ப்படும் எல்லாப்பொருள்களும் செயல்களும் பதிகின்றன. பிள்ளைகளிடம் தங்கள் தாய்தந்தையரின் நடைஉடைபாவனை, குணம், குற்றம், தொனியெல்லாம் படிகின்றன. மாணாக்கர்களிடம் தங்கள் உபாத்தியாயருடைய மாதிரிகளெல்லாம்படிகின்றன. பட்டினத்தான் ஒருவன் திருநெல்வேலியில் வசிப்பானாயின், அவனுக்குத் திருநெல்வேலியாருடைய ஒருமாதிரியானபேச்சு பிடிபட்டுப்போகின்றது.

"நல்லாரைக்காண்பதுவும் நன்றே"
"தீயாரைக்காண்பதுவும்தீதே"

என்ற நம் ஔவைப்பிராட்டியின்முதுமொழிகளையே நாம் கவனிக்க வேண்டும். மேலும் இதனுண்மை பலகாலும் எடுத்து ஓதப்படும் பின்வரும் தேவர்குறளாலும்போதரும்.

"நிலத்தியல்பால்நீர்திரிந்தற்றாகுமாந்தர்க்
கினத்தியல்பதாகும்அறிவு"

நீர் எந்தநிலத்தோடுசேர்ந்ததோ அதன்தன்மையாதல்போல, மனிதருடையகுணமும், அவர்கள்சேர்ந்த இனத்தின்தன்மைபோலாகும். வானத்தினின்று இழியும் சலம் நிறமும் ருசியுமில்லாதது. செம்மண்ணில்வீழ்ந்துசெல்லும்போது செந்நிறமாயும், கருமண்ணில் ஓடும்போது கறுப்பாயும், உவர்நிலத்திற் பாயும்போது உவர்ப்பாயும்,கலங்கியும் அழுக்கடைந்தும், தன் தன்மையும் நிறமும் பரிசுத்தமும் மாறிநிற்கும். அதுபோலவே மனிதனும் நல்லோருடன்சேர்ந்தபோது நல்லவனாகின்றான். தீயவரோடுசேர்ந்தபோது தீயவனாகின்றான். இவ்வினவிதி (Law of Association) பின்வருமாறு பேசப்படுகின்றது. "நாம் எதனை உய்த்துணருகின்றோமோ, எதனுடன்கூடுகின்றோமோ, அதுபோலாகின்றோம்" இவ்விதி, ஜீவதத்துவநூல்களிற் பெரிதும் விளக்கப்படுகின்றது.*

---

*இதற்கு ஒப்பாக, புற்பூண்டுகளிலும், பசு பக்ஷி கீடம்முதலியவைகளிலும், விளங்கும் வேறுவேறான தோற்றங்களைக்காட்டலாம். அநேகமாய்த் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டுப் பூச்சிகளும், பறவைகளும், மிருகங்களும், அவைகள் வசிக்குமிடம்பற்றி நிறம்மாறுகின்றன. பச்சையிலைகளிலும் செடிகளிலும்வசிக்கும் பூச்சிகளும் புழுக்களும் பச்சைநிறமடைகின்றன. கொம்புகளிலும், பட்டையின்மீதும் ஊரும்போது, பட்டையின்நிறத்தையும், குச்சி, இலைத்தாள்களின் உருவத்தையும் அடையும். விளக்குப்பூச்சியின் முட்டைகளிலிருந்துண்டாகும், குச்சிப்புழுக்கள் (Stick-caterpillars) நெட்டுக்குத்தாய்த் தலைகீழும் கால்மேலுமாய்நிற்கும்போது அக்கிளைகளின் சிறுகுச்சியினின்றும் வேறுபடா. குச்சிப்பூச்சிகள் அல்லது கும்பிடும்பூச்சிகள், (மழைப்பூச்சி அல்லது ஓட்டைப்பூச்சி என்று தமிழில் வழங்கப்படுவன), தமக்கு விரைவாகச்செல்லும் சக்தியின்மையால், தாம் வசிக்கும் இடம்பற்றி, அந்தந்த இலைபோலவும், குச்சிகள்போலவும், பூக்கள், புற்கள்போலவும் உருவடைந்து, செடிகளில் உலாவும் மற்றத் தும்பிமுதலியபூச்சிகளை ஏமாற்றிப்பிடித்து இரையாக்கிக்கொள்கின்றன. இப்பூச்சிகளில் வாகையிலைக்கொத்தைப்போலவும், அறுகம்புற்கொத்தைப்போலவும் (காய்ந்தபுல்நுனியுள்பட) சிலவற்றைப் பார்த்திருக்கின்றோம்.

டார்வின்பண்டிதர்காட்டியது, பன்றிகளைவளர்ப்பவர்கள் பன்றிமுகமும், குதிரைகளைவளர்ப்பவர் குதிரைமுகமுமடைகிறார்கள் என்பது. ஒருதலைவனும் தலைவியும் ஒப்பற்றகாதலுடன்வாழுங்கால், முகவிலாசம் ஆரம்பத்தில் எவ்விதவேறுபாடுடையதேனும் வரவர அவ்விருவர்முகமும் ஒரேரூபமடையவும்செய்கின்றது. அவர்களுக்கு இரு உடம்பும் ஒருயிரும் என்பது அல்லவோ உண்மை. உயிரொன்றாக உடம்பும் ஒன்றாயிற்று. இவர்களில் ஒருவர்க்குண்டாகிய எண்ணம் மற்றவருக்கும் அதேநேரத்தில் உண்டாவதையும் நாம் கண்கூடாகக்கண்டிருக்கின்றோம். "இயற்கையுலகில் தெய்வீகஇயல்" (Spiritual Law in the Natural world), என்னும்நூலிற் பின்வருமாறு காண்கின்றோம். "எல்லாவற்றிற்கும் காரணமாகிய மூலத்தை உய்த்துணர்ந்தவிவேகிகள் அதனோடு ஒற்றித்துநிற்றலால், அவர்களும் காரணர்களாகின்றார்கள்; எதனை உய்த்துணர்ந்தோமோ, எதனோடு நெருங்கச்சார்ந்தோமோ, அதன்வண்ணமாவோமென்பது

---

ஒருசெடி பச்சையாயிருந்து பழுப்புவர்ணமடையும்போது, இப்பூச்சிகளும் நிறமாறுகின்றன. பச்சோந்தியினியல்பு மிகவும் ஆச்சர்யமானது. பயத்தினால் நிறம் மாறுகின்றதில்லை. கூட்டிலிருக்கும்போதும், நிறம் மாறாது. ஆனால் ஓடும்போது, தரை சிவப்பாயிருந்தாற் சிவப்பாயும், கறுப்பாயிருந்தாற் கறுப்பாயும் இருக்கும். மரத்தில் ஏறும்போது பட்டைநிறமாயும், இலைகளிலிருக்கும்போது பச்சைநிறமாயும் நிறம் மாறுகின்றது. பறவைகள் எவ்விடம் கூடுகள்கட்டுகின்றனவோ அந்தநிலத்தின்சார்பாக நிறமடையும். சிங்கத்தின் நிறமும் அது வசிக்கும் இடம்பற்றியே. செடிகள் இல்லாத ஆப்பிரிக்காதேசத்துப் பாலைநிலத்திலே, சிறுகுன்றுகளிலுள்ளநுழைகளில் அவைகள்வசிக்கின்றன. அக்குன்றுகளின் ஓரம்நிற்கும்போது, வேட்டைக்காரர்கள்கண்ணுக்கு அவைகள் புலப்படமாட்டா, அப்பாறைகளின்நிறமும், சிங்கங்களின்நிறமும் விரவிநிற்றலால். சித்திரக்காரர்களும் படந்தீட்டும்போது இவ்வியல்பை நன்குவிளக்குகின்றார்கள். தூரநின்று பார்க்கும்போது சிறுகுன்றுகளாகத்தான்தெரியும். நெருங்கி உற்றுப்பார்த்தால்தான் பாறையென்றும், மிருகங்களென்றும் பாகுபாடுசெய்யலாம். புலிகளின் நிறமும்அவைகள்வசிக்கும் மரமடர்ந்தசோலைகளின்மாட்சியே. அச்சோலைகளில், ஒளியும் நிழலும் மாறிமாறிவிழும். புலிகளின் பட்டையும் நிழலும் ஒளியும் போன்றது. அதனால், அவற்றை மற்றச்செடிகள்முதலியவைகளினின்றும் பிரித்துக்காணமுடியாது. ஒருவன் கிச்சிலிமரத்தின் இலைகளைப்பார்ப்பானாயின், அதிற் பக்ஷிகளின் கறுப்பும் வெளுப்புமான மலத்தைப் பார்க்கலாம். அவைகள் மலமல்ல, அதுபோன்ற புழுக்கள். அவைகள் பக்ஷிகளுக்கு இரையாகாதிருக்கும்பொருட்டு அப்படி மாறுவேடம்பூண்டுள்ளன. சிலபூக்கள் (புல்லுருவிப் பூடுகளில்) (Orchids) விசேஷமாய்த் தும்பிகளையும் புழுக்களையும் மற்ற உருவங்களையுமே ஒத்திருக்கின்றன. பாடினாக்துரை எழுதிய பூச்சிவருக்கஅதிசயம், (Romance of the Insect world) என்னும்நூலில், 6, 7 அதிகாரங்களில் இன்னும்பார்க்க.

என்றும் மாறாதவிதியாதலின். நாம் எவருடன் நெருங்கிவாழ்கின்றோமோ, அவர்களைப்போ லாகின்றோம். முகவிலாசமும், பேச்சும், உருவமும் ஒன்றாகின்றது. ஒரொருகால், ஒருபிள்ளை தன்தாயின் வேறாய்ச் செவிலித்தாயினுடைய உருவமடைகின்றது." இவர்கள் கூறும் மனோகரணபலம், அல்லது குண்டேபண்டிதர் (Professor Kunte) கூறும் மனிதனுடைய மறைந்தசக்தி (Potential Power) தான், நாம்கூறும் அதுவதுவாதற்றன்மை. இந்தக்குணந்தான் எல்லா வுபாசனைகட்கும், சாதனபாவனைகளுக்கும் ஏதுவாய்ப் பந்தமோக்ஷங்கள் எய்துவதற்கும் ஆதாரமாயுள்ளது. நாம் முற்றறிவு, பரிசுத்தம், கட்டின்மையுடையவர்களாயின், சிற்றறிவும் அழுக்கும் கட்டும் நமக்கேன்வந்தது? சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவர்களாவதில்லையெனின், அது எல்லாருடைய அநுபவத்துக்கும் மாறாகும். வந்த காரணம் தெரியாதெனின், கேட்டதையே மறுத்துச்சொல்லுவதென்னும் தோல்வித்தானமடைந்து, தர்க்கநியாயத்துக்கு மாறாகும். முற்றறிவுடையது சிற்றறிவையடைந்ததென்பதற்குச் சான்று ஏதாவது உண்டா? எவ்விதமாய்ப் பின் நமக்குத்தெரிந்தது? இவ்வினத்தார் ஆப்தவசனம், சுருதிவாக்கு என்று கடைசியாகக் கூறுவார்கள். இவர்கள்கூறும் ஒவ்வொருசுருதிக்கும் பதிற்சுருதிகள் சித்தாந்திகளும் காட்டக்கூடுமே? உயிர் இறைவனலன் எனக்காட்டும் சுருதிகள் ஏராளமாகவும், ஏகமென்பதைச்சாதிக்கும்சுருதிகள் மிகவும் அற்பமேயன்றோ? இவ்வற்பசுருதிகளும், நம் சித்தாந்தத்துக்குமுரணுகாமையைப் பின்விரிக்கப்போகின்றோமாதலால், ஈங்குக்காட்டுமுயிரினியல்பு, மனிதன் பந்தத்துக்குட்பட்டு, சிறுதொழில் அடைந்ததை விளக்கும். உடம்பினும், ஐம்பொறி கரணங்களினும் வேறாகிய உயிர், தான் அவைகளாகப் பாவிப்பதனால், அவற்றின்கர்மங்கள் நிகழ்ந்தன. அது தன் உடம்பினையேபெரிதும்பாராட்டினது. உடம்புக்கும் காணங்களுக்கும் எது இன்பத்தைத்தருமோ அதனையே ஒருவன்செய்யலுற்றான். துன்பத்தைத்தருவனவற்றின்பேரில் வெறுப்படைந்தான். இந்நிலையற்ற உடம்பின்சுகத்தைவிரும்பிப் பிற உயிர்களிடத்தும், தன் இறைவனிடத்தும் தான்செய்யவேண்டியகடமைகளை மறந்து பாவங்களைச்செய்தான். அவா என்பது அவன் உள்ளத்திற்புகுந்து பலவங்

தப்படுத்திக் கீழே அவனை வீழ்த்திற்று.* இவ்வாசையே, எல்லாப் பிறப்புக்கும் காரணமாகின்றது. பொய்யாமொழியாரும் இதனை இரண்டு திருக்குறளால், தொகுத்துக்கூறுகின்றார்.

"அவாவென்பவெல்லாஉயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப்பிறப்பீனும்வித்து"

"காமம்வெகுளிமயக்கமிவைமூன்றன்†
நாமம்கெடக்கெடும்நோய்"

ஈங்குக் காமம் என்றது நம்பொறிகளுக்கு இன்பந்தருவதில் ஆசை அல்லது வேண்டுதல். துன்பந்தருவதில் வெறுப்பு அல்லது வேண்டாமையே வெகுளி. மயக்கம் என்பது மெய்யுணர்தல் என்னு மதிகாரத்தின் முதற்குறளில் இன்னதெனவிளக்கியிருக்கின்றது.

"பொருளல்லவற்றைப்பொருளென்றுணரும்
மருளானாம்மாணாப்பிறப்பு"

இம்மருள், மயக்கந்தான் ஆணவம், அகங்காரம், அவித்தை, (அவிச்சை) அஞ்ஞானம் என்பது. ஒருபொருள் இல்லாவிடத்து அங்கு ஒருபொருள் இருப்பதாக உணர்வது மயக்கமல்ல. இத்திருக் குறளின்படி ஓரிடத்து ஒருபொருளிருக்கவும், அதை இன்னொரு பொருளாகத் திரிவுபடவுணர்தலே மயக்கம். கிளிஞ்சில் இல்லாத போது வெள்ளியென்று ஒருவன் உணர்ந்தான் இது ஒன்று. கிளிஞ் சில் இருக்கும்போது அதனை வெள்ளியென்று அறிதல் இன்னொன்று.

---

* பகவத்கீதை - 3-ம் அதி - 36, 37, 38-வாக்கியங்களைக்கவனிக்க. இதிற் "பன்னிறங்கவரும்படிகம்" என்ற பண்டை உவமானமும் படிக்கப்படுகின்றது.
வார்ஷ்ணேயரே! எதனால் இழுக்கப்பட்டு எதனாற் பலவந்தமாய்ப்பந்திக்கப்பட்டு, மனிதன் இச்சையில்லாமலே பாவம்செய்கின்றான்.

"அன்புடன்பகவான்கூறுகின்றார்: ரஜோகுணத்தின்காரியமாகியஆசையால் தான். அது அவனைமுழுதும் மாசுபடுத்தியது. முழுதும் எரித்தது. அதுவே இவ்வுலகில் நமக்குப்பகையென எண்ணு. அக்கினி புகையினாலும், பளிங்கு தூசியினாலும், வயிற்றிற் பிள்ளை கருப்பப்பையினாலும் எவ்விதம் மூடப்படுகின்றனவோ அவ்விதமே, மனிதன் இதனால் மூடப்படுகின்றான்."

† பரிமேலழகர், தம் அருமையானஉரையில் வடமொழியார் குற்றங்கள் ஐந் தாகக்கூறுவரென்றார். அவை, அவித்தை, அகங்காரம், காமம், வெகுளி பற்று என்பன. யோகசூத்திரம் II(3)-ல் காண்க. முன்னிரண்டும் மயக்கத்தி லும், பின்மூன்றும் காமம் வெகுளியிலும் அடங்கும்.

உலகம், உடம்பு முதலிய ஒன்றுமில்லாதபோது தான் எல்லாம் அவையாகநினைத்தல் இதுவொன்று. உலகம், உடம்பு முதலியன இருக்க, அவற்றைத் தானாக அறிதல் மற்றொன்று. முன்னையதை மித்தியாவாதமெனவும், பின்னையதைச் சத்காரியவாதமெனவும் கற்றறிந்தோர் கருதுவர். இதனையே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் அத்துவிதசித்தாந்திகளும் ஒப்புவது. இதில், ஒன்றையும் பொய்யென்று ஒதுக்கவேண்டிய அவசியமில்லை. ஒன்றை ஒன்றாக மதிப்பதனால், முதன்முதற் குற்றம் உண்டாக, அதினின்று மற்றெல்லாக்கர்மங்களும் நிகழ்ந்தமை போதருகின்றது. இச்சிவஞானமும் மேற்காட்டிய உயிரின் தன்மை உண்மையின்றேல், நிகழ்வதற்கு ஏதுவில்லை.

தான்கூடியதோடு தன்னை ஒன்றுபடுத்துஞ்சக்தி மனிதனுக்கு இல்லையேல், தன்னைத் தன்தேகமாகத் தவறமாட்டான். பேய்ன்பண்டிதருடைய "மனதும் தேகமும்" என்ற நுண்ணியநூலைவாசித்தோர் பின்வருபவற்றைக் கவனித்திருப்பர். மனது, உடம்பு மூளையல்லவாகியும், மனதும் உடம்பும் ஆதிஅந்தமாகச் சம்பந்தப்பட்டு இவற்றின்தோற்றங்கள் நேர்படடும் ஒன்றுபட்டுமிருக்கின்றன. மனது கர்த்தா, கருதுவானாயிருந்தும் (Subject) கருதப்படும் நிலையில் (objective condition) உடம்போடு அதுவதுவாகி உடம்பிலும் மூளைநரம்புகளிலும் கெட்டுப்போகின்றது.* அப்படி மனதுகெட்டுப்போயினும், மனமில்லாதபோது உடம்பு, (பொருள் விஷயம்,) என்பது ஒன்று ஏற்படாது. சார்ந்ததன்வண்ணமாகும் இம்மனபலமே தன்னிழப்படைதல் என்னும் சக்தியாகவும் கூறப்படும். உயிர் தன்னைத் தன்னுடம்பில் இழந்து உடம்பாகியது; உயிர் தன்னைச் சிவத்தில் இழந்து சிவமாகியது. இங்கே இந்தச்சக்தியினால், மனிதன், எவ்வண்ணம் மிகவும் இழிவான மிருகப்பிராயத்தில்அழுந்துகிறானோ, அவ்வண்ணம் அதி உன்னததெய்வப்பிராயம் அடைகின்றான் என்பதைக் கவனிக்கற்பாலது. அவ்விதமானால் இக்குணத்தை மனிதனுடையகுற்றமாகவும் குணமாகவும் கொள்ளவரும். இப்பகுதியை நாம் ஆராய்வாம். ஒவ்வொரு மதவாதிகளும், ஆஸ்திகர்களோ, நாஸ்தி

* கெடுதல் அழிதல் என்னும் பொருட்டன்று. 'சாவிகெட்டுப்போய்விட்டது' என்பது உலகவழக்கு. 'நான்கெட்டு,' என்பது உயர்ந்தோர்வழக்கு.

கர்களோ, மனிதன் கடைத்தேறி உய்யும்பொருட்டு, சமயநெறிகளையும் கடமைகளையும், நீதிநெறிகளையும் கடமைகளையும் கற்பிக்கின்றார்கள். ஆனால் அந்நடையைக்கடைப்பிடித்துநடந்தால், உய்யும்வழி எவ்விதம்சித்திக்குமென்பதைக் காட்டினார்களில்லை. சாதனசதுஷ்டயங்களை அநுசரித்து குரு உபதேசமடைந்து, தவஞ்செய்து, அட்டாங்கயோகமுதலியசாதித்தால், அவித்தையினின்றும், பாவங்களினின்றும் ஒருவன் எவ்விதம் விடுபடுகின்றான் என்பதை விளக்கினார்களில்லை. இல்லையேனும், இதன்மூலம் பண்டைச்சாங்கியயோகநூல்களிலும், சித்தாந்தசாத்திரங்களிலும் விளக்கப்பட்டுள்ளது. கபில பாதஞ்சலிகமதங்களில், உயிரினுண்மையை ஒப்பி, அதன்மேற்செல்லுமாறுகாட்ட உயிரின்தன்மையை விளக்கவேண்டிவந்தது. ஆகவே, இவ்விருமதங்களும் வேதாந்தத்துக்கும், சித்தாந்தத்துக்கும் அடிப்படை எனச்சொல்லலாம். இவ்வடிப்படையின்றி, மேல்மார்க்கங்கள் செல்ல இயலாது.*

---

* சங்கரமதத்தில் மிகவும் அபிமானம்வைத்தவராகிய மாக்ஸ்முல்லர் பண்டிதர், (Prof. Max Muller) ஆதிசங்கரர் உள்பட எல்லா வடமொழிவியாகர்ணிகளும், யோகம் என்னும் பதத்தை உஜ் என்னும் தாதுவிலிருந்து பிறந்ததாகக் கொண்டு, 'கூடுதல்' 'ஒன்றுபடுதல், என்னும் பொருள்கூறியிருக்கவும், அப்பொருள் பிழையென ஒதுக்குகின்றார். இரண்டு உளபொருள்களிருந்தாலன்றோ, கூடுதல், ஒன்றுபடுதல் என்னும் வழக்கு உண்டாகும். சங்கர வேதாந்தத்தின்படி, இரண்டுபொருள் இல்லையாகவும், ஒன்றுபடுதல் என்று எங்ஙனம்சொல்லலாம் என்று அவர்காட்டுவதும் தர்க்கரீதிப்படி சரியானதே. ஆனால் அவர்கூறுவதுபோல், எந்த வடமொழிப்புலவரும் (இந்தியரில்) யோகம் என்பதற்கு ஒன்றுபடுதல் என்னும்பொருளில்லை என்று வெளிவராதவரை, யோகத்துக்கும் இவர்கள்வேதாந்தத்துக்கும் வெகுதூரமென்றேகொள்ளவரும்.

இம்மொழியோடு நாம் கீழேகூறும் 'உபநிஷதம்' என்னும் பதவிஷயமாகவும் ஒரு ஜெர்மானியபண்டிதர் (Dr. Deussen டாய்சன் பண்டிதர்) இவ்விதமே இடர்ப்படுகின்றார். ஸ்ரீசங்கரர் தமது பிரகதாரண்யக உபநிடதவிருத்தியின் முதற்கண்ணே இம்மொழியை உப+நி+சத் என்று பிரித்து—கூடநெருங்கவும் + அதிகம் (நெருங்கவும்) + அழிதல் என்னும் பொருளை விளக்கியிருக்கின்றார். பண்டிதர் இப்பொருள், அவர்கொள்ளும் வேதாந்தத்துக்கு முற்றும் முரணென்கிறார். உப என்றசொல் யோகம் என்ற பொருளைத்தருகிறது. இப்படி அதிகமாய்க்கூடுதலினாலே ஏதோ ஒருபொருள் அழிகின்றதென்றும் படுகின்றது. ஒரேபொருள் உண்மையாயின் கூடுதலும் கூடாது; உளபொருளும் நாசமாகி நாஸ்திகம் அல்லது சூன்யவாதமாகும். இது தான் பௌத்தமதத்தின் உண்மையும். இவ்விருமொழிகளாலும் உண்மைவிளங்குவது முப்பொருளே. பசுவும், பதியும் கூடாமற்றடுப்பது பாசம். கூடும்பொழுது, பாசமும், 'நான்' என்று உயிர்முனைத்துநின்றலையும் அழிகின்றது. "சென்று சென்று அணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாம்" 'நான்கெட்டுச்சிவமானவா,'

யோகத்தினின்றும், வேதாந்தத்தைவேறுபடுத்துவது மணலில் அஸ்திவாரம்போடுவதாகும். நாம் வேறு இடங்களிற்கூறியபடி உண்மைவேதாந்தம் அல்லது உபநிடதமார்க்கம், யோகமார்க்கம் ஆகும். யோகம், உபநிடதம் என்னும்சொற்கள் ஒருபொருட்பன்மொழிகளாதலின், சித்தாந்தம் அல்லது ஆகமாந்தமென்பது, ஞானமார்க்கம் அல்லது சன்மார்க்கமெனப்படும். வேதாந்தசித்தாந்தசமரசம் என்னும் சொற்றொடருக்கும் இதுவே பொருளாகும்.

இதுநிற்க, நாம் மேற்கூறியபடி சாங்கியரும், பாதஞ்சலிகரும், உயிர்க்கு, அதுவாதற்றன்மையை எடுத்திசைத்து, சாரூபமடைதலையும் சொல்லி, படிகத்தையும், செம்பருத்திப்பூவையும் உதாரணம் காட்டுகின்றார்கள்.* (இதைப் பின் அதிகமாக ஆராய்கின்றோம்) உய்யுநெறியில், உயிர் கீழிறங்கினதையு மாற்றிச்செல்லவேண்டும். மனிதன் தன்னை உடம்போடு ஒன்றுபடுத்தவும் கட்டுக்குட்பட்டான். இது மாறவேண்டுமாயின், ஆதிகாலந்தொட்டுப்பழகிவரும், இத்தனுகரணபுவனபோகங்களினின்றும், கொடியினின்றும் கக்கரிக்காய்

---

என்னும் பரமோபதேசங்களை இச்சொற்களன்றோ அடக்கி நின்றன. மிகவும் நுண்ணிய அறிவையும், பரஞானத்தையும் உடைய நமது ஆன்றோர் இவ்விதமாக வல்லவோ, சிறுவார்த்தைகளிலும் யாவராலும் என்றும் அழிக்கப்படாமல் அத்துவிதசித்தாந்த உண்மையை அமைத்திருக்கின்றார்கள். நாம் ஒருகால் முத்தி, மோக்ஷம், வீடு என்ற ஒருபொருட்பெயர்களைச் சிந்தித்துக்கொண்டு, அதனால் முப்பொருள் நிச்சயமாதலைக்கடைப்பிடித்து, அக்கருத்தினை நமது காலம்சென்ற, அரியநண்பர் ஸ்ரீமான்-தண்டலம் பாலசுந்தரமுதலியாரவர்களிடம் வெளியிட, அவர் நாம்வியந்து உளமகிழும்படி, திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் அருளிய வேதகிரீஸ்வரர்பதிகத்தில் ஒருபாட்டை எடுத்துச்சொன்னார்கள். அது பின் வருமாறு :—

வீடென்றறைதருசொற்குப்பொருளோவிடுதலையாதலினால்
வீக்குண்டோனும்கட்டுண்டோனும்விளங்குந்திடமாக
பீடுறுகட்டுத்தானும்விட்டுப்பெயராதுஇதுசடமாம்
பிணிபட்டோனசுதந்தரனாகும்பிணிபெயரச்செய்வோன்
நீடுசுதந்தரமுண்டாமொருவன்எனுமிவ்வேதுவினால்
நிகழ்பதிபசுபாசம்மெனமுப்பொருள்நிச்சயமென்றருளி
வேடனைவெல்லுங்குருவாயெனையாள்மெய்ப்பொருள்நீயன்றோ
வேதகிரிப்பவரோகவயித்தியவேணிமுடிக்கணியே.

உயிர் மெய் என்னும் இலக்கணமொழிகளும் நம் அத்துவித இலக்கணத்தை விளக்குவதாயிட்டு; எம், 'அத்துவிதம், சைவசித்தாந்தத்தின்படி, என்ற நூலிலும், இங்கும் விரித்திருக்கின்றம்.

*யோகசூத்திரம் I 41 சாங்கியசூத்திரம் VI 27, 28 பார்க்க.

அறுப்புண்டுபோவதுபோல (இது உபநிடதங்களிற் காணப்படும் உதாரணம்) எவ்விதம்விடுபடுவது?

மனிதன் இழிபொருளோடுசேர்ந்தபோது இழிபொருளாகுன். உயர்பொருளோடு ஒன்றுவானுயின் உயர்பொருளாகக்கூடும். *

நிலையின்றிக் கேடுறும்பொருள்களாகிய உடம்புமுதலியவற் ருேடுகூடியதால், அவன் கேடுற்ருன்.

கேடுபடா அமிர்தத்தோடு† அபேதசக்தியால் ஒன்றுபடட்டும். உடம்போடொன்றி உடலின்பத்தை இச்சித்தவன், இக்காமம், வெகுளி, வெறுப்பு, விருப்பு, இச்சை இவற்றை அறுக்க, அவன் பிறப்பை அறுப்பான். ஆயின், வெறும் ஆசையின்மையை ஒருவன் அவாவினுல், (வேண்டாமை வேண்டின்) அதனுலேயே, அவ்வாசை அறுமோ? சிலர் அங்ஙனம் கூடுமென்கிருர்கள். அவர்கள் எட்டுச் சுரைக்காயைக் கறிசமைப்பவர்கள். இங்கே, உயிரின் இன்னெரு குணமாக நாம் மேற்கூறிய, பற்றுக்கோடின்றிநில்லாமை என்னும் உண்மை உபயோகமாகும்.

உடம்பு உலகமாகிய சார்புடனுவது அல்லது இறைவனுகிய சார் போடாவது, பற்றிக்கொண்டிருக்கவேண்டும். பாசநீக்கம்வேண்டு மாறுல், பதியைப்பற்றவேண்டும். பதியின்றேற் பாசத்துடனென்றிப்

---

* கீதை.

"மனதை என்னிடம்பதித்து, என்றும் ஒப்புடன் அயரா அன்புடன் யாவர் என்னைவழிபடுகிருர்களோ, அவர்களே என் எண்ணத்தில் யோகத்தில் முதிர்ந்தவர்களாவர்" XII—I.

2 "பொறிகளை வென்றுவிடுத்து எவற்றினும் இருவினையொப்படைந்து, எல்லாரும் இன்புற்றிருக்க உவகையெய்திய இவர்களும் என்னை அடைகிருர் கள்" (XII. 4.)

"எல்லாப்பணிகளையும் என்பணியாக்கி என்னில் மனதைப்பதித்து இருத யத்தில் யோகத்தியானம்செய்பவர்கள்" (XII. 6.)

"இவர்களைப் பிறப்பிறப் பென்னும் கடலினின்றும் விரைவில் எடுக்கின் றேன், அவர்கள்மனம் என்னிடம் பதிந்திருத்தலால்" (XII. 7.)

"உன் உணர்வையும் உளத்தையும் என்னிற்செலுத்து. பின் ஐயமின்றி என்னுடன் இனி என்றும் வாழ்வாய்" (XII. 8.)

† இருக்குவேதம் (I. 4–3. 9) ருத்திரசிவனை அமிர்தனென முறையிட் டிருக்கின்றது.

'தர்மசிகையின் அதி உச்சியிலுள்ள, ஓ! அமிர்தனே! ஓ சோமனே! உனக் குரிமையுடையவர்களைக்காக்க. உன்னை வந்திப்பாரை நினைக.'

பிறப்பிறப்பினில் மறுபடியும் அழுந்தவேண்டும். உயிருண்மையைக் கூறுதமதங்களிலெல்லாம் ஒரு ஒற்றுமையைக்காணலாம். அவர்களுக்குக் கடவுளென்றபொருளுமில்லை. கௌதமபுத்தர் நுணுக்கமாய் உயிர் உள்ளதோ இல்லதோ என்னுங்கேள்வியைவிடுத்துச் செல்லுகின்றதை நாம் கவனிக்கலாம். அவர் கடவுளில்லையென்றதனால், இப்படி அவதிப்பட்டதென்க. எனினும் அவர்வழிவந்தோர் தர்க்கநியாயமுடிவுசெய்து உயிரில்லையென்றும், முற்றும் நாசமடைகின்றதென்றும் நிச்சயமாய்க் கூறுகின்றார்கள். பாசவீக்கத்தின்பிறகு என்னவிருந்தது என்றுகேட்கும்போது என்னபதில்? நிர்வாணம்* (ஒன்றுமில்லை) என்பதே. மேற்கூறியதற்கு விலக்கு ஒன்றுண்டு. நிரீஸ்வரசாங்கியர் கடவுளில்லை என்றுகூறினும் உயிருண்மையை ஒப்புக்கொள்கிறார்கள். எனினும், நாம் மேற்கூறியபடி பசு பதியுடனாகிலும், பாசத்தோடாயினும் பற்றியிருக்கவேண்டும். எல்லாமதங்களிலுங்கூறும் நன்னெறிகளெல்லாம், பாசங்களிலுள்ள பற்றைநீக்கி, பதியின்மீது பற்றை யுண்டாக்கவேண்டியகாரணமாயிற்று. பின்கூறிய பற்றே முன்கூறியபற்றினைவிடற்கு ஏதுவாகும்†

"பற்றுகபற்றற்றான்பற்றினை அப்பற்றைப்
பற்றுகபற்றுவிடற்கு"—திருக்குறள், 350.

"சார்புணர்ந்துசார்புகெடஒழுகின்மற்றழித்துச்
சார்தராசார்தருநோய்"—ஷை 359.

உரையாசிரியர் உலகப்பற்றினையொழிக்க வேண்டிய ஒழுக்கம் அட்டாங்கயோகமென்றார்; நாயனாரும், முன்மூன்றுகுறளிற் பாசநீக்கம்பெற்றுப் பதியுடன்கூடுகைக்குவேண்டிய மூன்றுசாதனங்களாகிய கேட்டல், சிந்தித்தல், பாவனைகளைக்கூறினார். பதியினைச்

---

* ரைஸ்டேவிட்ஸ்பண்டிதர் நிர்வாணம் என்னும்பதத்துக்குப் பொருள், ஜீவமுத்ததசை என்றார். ஆயின், அத்தசைக்குப்பின் என்னவாயிற்று? சூத்திரங்களில் ஒன்றுமில்லையென்றே சொல்லப்பட்டிருக்கிறது.

† நமக்குப்பிடிபட்டிருக்கும் சிற்சிலபழக்கங்களைநீக்குவது எவ்வளவுகடினமென்று நாமெல்லாரும் அறிந்தது. பழையபழக்கத்தைத்தவிர்க்க, புதியபழக்கம் வேண்டுமென்கிறார்கள். பொடிபோடுவதைவிலக்க, சுருட்டைப்பற்றுகிறார்கள். ஒருபெரிய டாக்டர் குடியைவிலக்க, அபின் உபயோகப்படுத்தச்சொன்னது நமக்குத்தெரியும்.

'செம்பொரு'ளென்றும், 'உள்ளது' என்றும், 'மெய்ப்பொருள்' என்றும் அவர்பேசினுர். அதன்பொருளேயும், பாவனே என்பதன் இயல்பையும், உரையாசிரியர் விளக்கியது மிகவும் கவனிக்கத்தக்கது.

"தோற்றக்கேடுகளின்றி யுண்மையின் நித்தமாய், நோன்மையாற் றன்னே ஒன்றும் கலத்தலின்மையின், தூய்தாய், தானெல்லாவற்றையுங் கலந்துநிற்கின்றமுதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி அதனேச் செம்பொருள் என்ருர். மேல் மெய்ப்பொருளெனவும், உள்ளது எனவும் கூறியதூஉம் இது பற்றியென உணர்க. அதனே (அச்செம்பொருளே)க் காண்கையாவது உயிர் தன் அவிச்சைகெட்டு, அதனேடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல். இதனேச் சமாதி எனவும் சுக்கிலத்தியானமெனவும் கூறுப. உயிர் உடம்பின் நீங்குங்காலத்து, அதனல் யாதோன்று பாவிக்கப்பட்டது, அஃது அதுவாய்த்தோன்றுமென்பது எல்லா ஆகமங்கட்கும் துணிபாதலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாகிய பாவனே கெடுதற்பொருட்டுக் கேவலப்பொருளேயே* பாவித்தல்வேண்டும்"—(திருக்குறள், 358-உரை.)

இவ்வதுவதுவாதற்சக்தி மிகவும் பிரமாதமேயாம். இது தபசு, உபாசனே, தியானம், பாவனேமுதலியவற்றுக்கும் மூலாதாரம். இந்தப் பாவனுசக்தியைப்பற்றி, தேவர் இன்னும் இரண்டிடங்களிற் பேசுகிருர்.

"வேண்டியவேண்டியாங்கெய்தலாற்செய்தவம்
மீண்டுமுயலப்படும்" (265)

"எண்ணியஎண்ணியாங்கெய்துபவெண்ணியார்
திண்ணியராகப்பெறின்" (666)

இதுநிற்க, உயிரின் இவ் விரண்டாவதுகுணம்பற்றியே கடவுளொருவன் அவசியம் வேண்டுமென்னும்விஷயத்தில் மீண்டும்புகுவோம். கடவுள் இல்லாவிடில் என்னஆகும் என்பதற்கு நாம் அடிக்கடி ஒரு உதாரணம்காட்டுவதுண்டு. திருவிழாக்காலங்களில், வழுக்குமரம்நட்டு அதன்நுனியில் ஒரு கொக்கியும் அதிற் பணமுடிச்சும்

---

* 'சிவ ஏவகேவல' சுவேதாசு-உபநி-IV. 18.

கட்டுவதுண்டு. அநேகர் மாமேறப்புகுந்தும் ஒருவனுவது முடிச்சை அவிழ்ப்பவன் இரான். அப்படி ஏறினவனும் அங்கிருக்கும் பற்றுக் கோட்டைப் பற்றினுலல்லது, மீண்டும் சறுக்கியேவிழுவன்*. ஆகவே, ஒருமதம் எவ்வளவு உன்னதமாகப்பேசப்பட்டாலும், கடவுளை நமக்குக்கொடுக்காவிடில் வீடு, நிர்வாணம், பந்தவிக்கம் என்பதெல்லாம் வெறும்பேச்சே. தன்னை அதிகப்பிரயாசையுடன் அவாவின்மை முதலியவைகளால் ஒருவன் சுத்தனுக்கியும் பிறப்பிறப்பென்னும் படுகுழியில், மீண்டும் மீண்டும் விழவேண்டும். விழுந்து மீண்டும் மீண்டும் வழுக்குமரத்தில் ஏறவேண்டும்.† மேல் உயிரின் இவ்விருகுணங்களையும் ஆராயாதகுற்றமே, நாஸ்திகர்களையும், மாயாவாதிகளையும் அவலப்படுத்தியது.

உடலோடொன்றியபோது உயிர் உடலாயிற்று. தன்னுருவம் கெட்டது. உடலில் அதனை எவ்வித ஆயுதப்பிளப்பினுலும் ஆராய்ந்து கண்டுபிடிக்க இயலாது. கடவுளும் உயிரும் ஒன்றுன போது நான் என்பதை அப்பூரணத்திற் காணமுடியாது. ஆகவே இவ்விருதிறத்தாரும், உயிரில்லையென்றூர்கள். பின்னையவர் 'நான்' ஆக எண்ணியதும் கடவுளே என்பார்கள். ஆகவே இவ்விருதிறத்தார்க்கும் அநுபவம் சுவாநுபவம் என்பதும் வெறும் பேச்சாகும். பாசக்ஷயம் ஒன்றுமட்டுமே உண்மை. உடனே ஒருவர்க்கு நிர்வாணமும், நாசமும் மற்றெருருவர்க்கு பிரமம் சுவச்சொருபமடைதலும் சித்தித்தது! எனினும் சூனியம் அல்லது பிரமத்தினின்றும் உதித்தழிந்த ஒருபொருள் மீண்டும்பிறப்பதற்குண்டாகிய தடை என்னவென்பதை விளக்கினுர்களில்லை. இவ்வுண்மையைக் கடைப்பிடித்தோ டாய்ஸன்பண்டிதர், சம்சாரச்சுழற்சி என்றும் அழியாது என்பதுபற்றி உயிர்கள் உண்டாயது என்று சொல்லிய

---

* ஈங்கு, அதுவதுவாதற்றன்மைபொருந்திய உபநிடதப்புழுவை மீண்டும் உவமிப்பாம். அது, யார்கண்ணுக்கும் புலப்படாது இலையேயாகி, ஒரு இலையை விட்டு இன்னெரு இலைக்குப்போகும்போது, மற்றெருஇலையைப் பற்றிக் கொண்டே இருந்தஇலையைவிடும்.

† இதுகாரணம்பற்றியோ, நிர்வாணமடைந்த புத்தரும் மீண்டும் மீண்டும் பிறந்து இறந்தாரென்றது? அவர் இறந்தசரித்திரத்தை மகாபரிநிர்வாணசூத்திரத்திற்காண்க. இக்காலத்துள்ள சில பிரசன்னபௌத்தர்கள், மீண்டும் பிறப்பதில்லை என்னும் வேதமகுடவாக்கியங்களைச் சாமான்யமொழிகள் என்பதும் இதுகாரணம்பற்றியோ?

னுஉம்? அங்ஙனமாயின் நம் நன்னெறியின் அவசியத்தை அழிக்குமென்பதூஉம், சமயநீதி சாதனங்கட்கு ஊறுசொல்லவேண்டுமென்பதூஉம், உறுதியாம். இவ்வளவு முயற்சிசெய்தும், மறுபடியும் கீழேவிழவேண்டியதானுல், சாதனசதுஷ்டயம், குருபதேசம், தபசுமுதலியன எற்றுக்கு? அற்றன்று. நமதுமாட்சியும் இறைவனில். இறைவன்மாட்சியில் நாம் மகிழ்கின்ருேம். நம்மை விடுவிப்போன் அவன். வீட்டின்பயனும் அவனே. அவனில் நம் அநுபவமின்றேல், வீடுதான் எற்றுக்கோ? நாம் முற்றவரும் பரிசு அவனே. சாந்தோக்கிய உபநிடதம் கூறுகிறபடி,

"இதை எவன் பார்க்கின்ருன், சிந்திக்கின்ருன், உணர்கின்ருன், அவன் கடவுளை நேசிக்கின்ருன். கடவுளில் இன்புறுகின்ருன், கடவுளில் மகிழ்கின்ருன், அவன் தன்னரசாகின்ருன். சர்வ அண்டங்களிலும் இறைவனும் தலைவனுமாகின்ருன்." VII. 25.2.

மேல் இவ்வுயிரினியல்பு, துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்னும் கக்ஷிகளுக்கு எம்மட்டு உபயோகப்படுமென்பதனை ஆராய்வாம். இதனை அத்வைதம் என்னும் நூலில் அதிகவிரிவாய் எடுத்துப் பேசியிருக்கின்ருேம். விஷயமெல்லாம் உயிரும் இறைவனும் ஒன்ருே, வேருே என்பது. வேருயின் அகம்பிரம்மாஸ்மி முதலிய மகாவாக்கியங்களுக்குப் போக்கென்னே? நாம் வேறு இடங்களிற்காட்டியபடி அத்வைதம் என்னும் சொல் ஏகம் என்னும் பொருட்டன்று. மற்றப்பொருள்களினுண்மையைமறுத்ததில்லை. இருபொருளும் பிரிக்கக்கூடாதது, அநந்நியம், அந்நியநாஸ்தி என்றேபொருள்கொள்ளல்வேண்டும். வேருயிருந்தும் ஏதோ ஒருவிதசம்பந்தத்தினுல் ஒன்ருகக்கூடும்: இது எப்படியாகும்? "பொய்கண்டார் காணுப்புனிதமெனும் அத்துவித மெய்கண்டநாத"னும் பின்வருமாறுபேசுகிருர். "இரண்டாயிருப்பின் ஒன்ருகா. ஒன்ருயின், சுவாநுபூதியில்லை" இம்முடிச்சை எப்படி அவிழ்ப்பது? இதுகாறும் நாம் ஆராய்ந்துவந்த உயிரின்குணத்தை ஞாபகப்படுத்தினுல் இதனை முடிவுசெய்யலாம். பொருள்வேருயினும் உயிர் கடவுளுடன் சேர்ந்தபோது தான் அதுவாய்த் தன்னறிவும் செயலும் அற்றுநிற்றலால் உயிரும் கடவுளும் ஒன்ருகும். இங்கு ஒன்று என்றதும் இருபொருள்

ஒரேதன்மைத்து (பொன்னும் அணியும்போல) என்றதைவிட, பொருள்விசேடித்து இருபொருள் ஒன்றின் அதுவதுவாதற்றன்மையால் ஒற்றித்துநிற்றலேயே ஒன்று என்றுகூறுதலும் உண்மை. இது இலக்கணவழக்கினும் காணக்கூடும். "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" இவ்வொற்றுமை இயல்பான ஒற்றுமை என்பது சூத்திரக்காரர்கொள்கை.

இவ்வுயிரெழுத்தும் உடல் (மெய்) எழுத்துமே, நம்முயிருக்கும் உடலுக்குமுள்ள இயைபைக்காட்டி, நம்கடவுளுக்கும் நமக்குமுள்ள இயைபையும் காட்டவல்ல முக்ய உதாரணங்களாகும். மேல் அப்படி ஒற்றித்தநிலையில், தான் எனக்காணுது, சிவாநுபூதி ஒன்றே விளங்குமாதலால் இங்கு ஒன்று என்றதும், கடவுள் ஒன்றே என்றதும் போதரும். இவ்வுண்மைகளெல்லாம், திருவாசகத்தின் இருதயபாசுரத்தின் அமைந்துகிடப்பதை நாம் "திருப்பாசுரவிளக்கம்" என்ற நூலில் விரிவாய்க்காட்டியிருப்பதை ஆங்குத் தேர்ந்துணர்க.

"இன்றெனக்கருளிஇருள்கடிந்துள்ளத்
தெழுகின்றஞாயிறேபோன்று
நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தே
னீயலாற்பிறிதுமற்றின்மை
சென்றுசென்றுஅணுவாய்த்தேய்ந்துதேய்ந்துஒன்றும்
திருப்பெருந்துறையுறைசிவனே
ஒன்றுநீயல்லையன்றியொன்றில்லை
யாருன்னையறியகிற்பாரே." —(கோயிற்பதிகம். 7.)

சிவஞானயோகிகள் தம் திராவிடமகாபாஷ்யத்திலே, மிகநுணுக்கிச் சொல்லுகின்றூர்,

"மற்றென்னையோ அத்துவிதமென்னும் சொற்குப்பொருளெனில், சித்தாந்தசைவர் உரைக்குமாறுகாட்டுதும்! அது நீயாகின்றுய்! எ-ம், 'அது நாஞகின்றேன்' எ-ம், 'அது இதுவாகின்றது' எ-ம் மூவிடம்பற்றிநிகழும் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களைக்கேட்டவழிஅதுவென்பது ஒருபொருள், ஆதலின் ஒருபொருள் மற்றொருபொருள்ஆமாறு யாங்ஙனம் என்னும் ஐயம் நீங்குதற்கு எழுந்ததாதலின், அதுவதுவாதற்கு ஏதுவாய், அவ்விரண்டிற்கும் உளதாகிய சம்பந்தவிசேடமுணர்த்துதலே அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள் என்று உணர்ந்துகொள்க."

முன்னமே நாம் உதகரித்திருக்கும் உமாபதிசிவத்தின் உண் மைத்திருக்குறளுக்குப்பதில், இருளில் இருளாகியும் ஒளியில் ஒளி யாகியும் உள்ள உலகியற்பொருள்கள் படிகம், நீர், கண் என்பார்கள். கண், இருளில் சக்தியற்றும், ஒளியில் ஒளிபெற்றுமுள்ளது. பளிங் கும் அவ்வண்ணமே. நீரின் தன்மை முன்னே விசாரித்தாம். பின் னும் பேசுவாம். ஆயினும், பண்டைநூல்களிலுள்ள உதாரணம் படிகம் ஒன்றுதான். இது சாங்கிய யோகசூத்திரங்களுள் உள்ளது.*

---

* ஈங்கு அவைகளையும் மற்றுமுள்ள மேற்கோள்களையும் காட்டுவாம்.

"செம்பருத்தியும் பளிங்கும்போல, உயிர் பற்றடையவில்லை. அடைந்தது போற் பாவித்தது." (சாங்கிய சூ. VI. 28.)

"சித்தவிகாரங்கள் எல்லாம் அறவே ஒழித்த ஒருவனிடம் ஞாதுரு, ஞானம், ஞேயம் எல்லாம் ஒன்றுபடுகின்றன, பிரகாசமுள்ள படிகத்தைப்போல்." (யோக சூ. I. 31.)

"இப்போது, ஒருவன் தன் ஒழுக்கத்தின்படி இதுவாவது அதுவாவது போன்று அதுவிது ஆவன். நல்லொழுக்கமுடையவன் நல்லவனுவன். கெட்ட ஒழுக்கமுடையவன் கெட்டவனுவன். தூய செய்கைகளால் தூயவனுகவும், தீய செய்கைளால் தீயவனுகவுமாவன்."

"அவன் ஆசைவழி, அவன் இச்சை; அவன் இச்சைவழி, அவன் தொழில். என்னென்ன தொழில்செய்கின்றுனே, அவற்றின்பயனை அவன் அனுபவிப் பான்."

"அவன் மனம் எதனிற் பற்றுகின்றதோ அதனிடம் தன் கர்மங்களோடு கெட்டியாக ஒற்றுமையுறுகின்றுன்."

"எவன் பரமாத்மாவைப்பற்றுகின்றுனே அவன் பிரமத்தினிடம் செல்கின் றுன். அந்த உயிர்தான் பிரமம்." (பிருஹதாரண்யக உபநி. IV. 5, 6.)

"தூசியினுல் மலினப்பட்ட கண்ணுடி, விளக்கினபின் எங்ஙனம் பிரகாசிக் கின்றதோ, அங்ஙனம் தன் உண்மையியல்பை யுணர்ந்தபின், பிறப்புற்ற புருஷ னும் துக்கத்தினின்றும் நீங்கிச் சாந்தமடைகின்றுன்."

"தன் உண்மையுணர்ந்தபின், விளக்கைக்கொண்டு பிறபொருளைப்பார்ப்பது போலப் பிரமத்தின் உண்மை இயல்பை உணர்கின்றுன். நித்தனும் பிறப்பிலியு மான எல்லா தத்துவங்களையும் கடந்த தேவனை உணர்ந்தபின், எல்லாப்பாசங் களினின்றும் விடுபடுகின்றுன்." (சுவேதாசுவதர உபநி-II 14, 15.)

"அவனை தியானிப்பதனுலும், கூடுதலினுலும் (யோகவழியாய்) அதுவது வாதலினுலும் (தத்பாவாத்) முடிவாக மாயை முளையாதென்க." (do. I 10.)

"ஒருவன் தான் எவர்களோடு வாழ்கின்றுனே, எவர்களை வணங்குகின் றுனே, எதனைப்போல் ஆகவேண்டுமென்று இச்சிக்கின்றுனே அவர்களைப்போ லும், அதைப்போலும் ஆகின்றுன்." (மகாபா. சாந்திபர்வ. ccc. 32.)

கீதாவசனம் முன்னர்க்காட்டியிருக்கின்றும்.

"வந்தெனுடல்பொருளாவிமூன்றுந்தன்கை
வசமெனவேயத்துவாமார்க்கநோக்கி
ஐந்துபுலனைம்பூதங்கரணமாதி
அடுத்தகுணமத்தனையுமல்லையல்லை
இந்தஉடலறிவறியாமையுநீயல்லை
யாதொன்றுபற்றினதனியல்பாய்நின்று
பந்தமறும்பளிங்கனையசித்துநீயுன்
பக்குவங்கண்டறிவிக்கும்பான்மையேம்யாம்"

—தாயுமானசுவாமிகள்.

மேல், இந்தப் பளிங்கு அல்லது கண்ணாடி உதாரணத்தை விசாரிப்பாம். நம்முன்னே மாட்சிமைபொருந்திய நம்மகாசக்ரவர்த்தி (அவர்நீடூழிவாழ்க) யின்படம் உளது. நாம் அதைப்பார்த்த அளவில், அந்தப் பன்னிறங்கவர்ந்தபடத்தைமூடியிருக்கும்கண்ணாடி நம்கண்ணுக்குத் தோன்றவில்லை. கண்ணாடியைப்பார்க்காதநாட்டுப்புறத்தான், அல்லது கண்ணாடிப்படத்தைப்பார்க்காத ஒருவன், அதைப்பார்க்கும்போது ஆங்குக் கண்ணாடியில்லையென்றேசாதிப்பன். அவன் அவ்வண்ணம் தான் நேரேபார்த்தபார்வையில் (சுவாநுபூதியால்) உறுதிகூறினும், நாம் அவன்சொல்வது தவறென்றே கொள்வோம். ஏன் இப்படி அவன்சொல்கின்றான் எனின், கண்ணாடி பன்னிறப்படத்தோடுசேர்ந்ததும், தன்சொரூபம்முழுதும்மறைந்து தானும்கெட்டுப்போய்விட்டதென்றேசொல்லவரும். அப்படியும் தன்னுருவம்கெட்டதேயன்றி, தன்லிங்கம்கெட்டதில்லை. படத்தை எடுக்கவும், கண்ணாடியைப்பார்க்கலாம். அக்கண்ணாடியைச் சூரிய வெளிச்சத்திற்கொண்டுவரின், அப்பொழுதும் கண்ணாடியைப்பார்க்க முடியாது. பளிச்சென்று சூரியவெளிச்சம் நம்கண்ணைப்பறிக்கும். ஆகவே, கண்ணாடியின்தன்மை எதனுடன்சேர்ந்ததோ அதன் வண்ணமடைந்து தன்வண்ணம்மறைந்துநிற்றலாகும். வர்ணம்,அழுக்குப்படிந்தபொழுதும், ஒளிபொருந்தியபோதும்,அவ்வழுக்கினின்றும் ஒளியினின்றும் வேறுபிரிக்கக்கூடாததாகிறது. கண்ணாடியைமட்டும் சோதித்தால், அது தூய்மையும் பிரகாசமும்பொருந்தியுள்ளது; ஆயினும், இது அழுக்குடன் அழுக்காகவும், இருளில் இருளாகவும் இல்லாமற்போகவில்லை. இதுதான் இதன்தூர்க்குணம். இத்தூய்மையும் பிரகாசமும், சூரியனுடையதூய்மை, பிரகாசம் இவற்றினின்றும் வேறு என முக்கியமாய் உணரவேண்டும். ஒரு பெரியவயிரக்கல்லை

எடுப்போம்.* (ஆங்கிலத்தில் அதற்கு (brilliant) பிரகாசமுள்ளது என்று போலிப்பேர்). அதிற்காணும் ஒளி அதனுடையதா? அதனுடையதானால் அடர்ந்த இருளிலும் பிரகாசிக்கவேண்டும். அவ்விருளில் அதைக் கண்டெடுக்கமுடியாது. ஆகையா லிதன் ஒளி, இதனுடையதன்று. சூரியன் அல்லது விளக்குவெளிச்சத்தினின்றுமே பிரதிபலித்தது. இதுதான் மனிதனுக்கும் கடவுளுக்கும் வேறுபாடு. நாம் வயிரக்கற்கள். கடவுள் அவற்றின் ஒளிக்கும் ஒளி. இவ்வுண்மை நம் அப்பர்சுவாமிகள்தேவாரத்தில் "வெண்பளிங்கின் உட்பதித்தசோதியானே." என்பதில் எவ்விதநலமுடன் இருக்கக்காண்கின்றோம். டென்னிசன்புலவரும் நாம் "கடவுளின் பகுக்கப்பட்ட ஒளிகள்" என்றார். அற்றன்று. நாம் அவனினின்றும் இரவல்வாங்கின ஒளியைக்கொண்டே ஒளிர்கின்றோம். "அறிவித்தாலன்றி அறியாவுளங்கள்". நம்மிடம் என்னென்ன நலமிருக்கின்றனவோ அவையெல்லாம் அவனதுடைமை. கேவலஅவஸ்தையில், நாம் சேற்றிற்பதித்த வயிரம்போலானோம். அதினின்றும் எடுத்தபோது, அழுக்கு இன்னும் ஒட்டியிருக்கின்றது. அதைக்கழுவிச் சாணையில்வைத்துத் தீட்டவும், அதிற் சோதியை மேலும்மேலும் உள்விடுகின்றோம். இதுதான் நம்முடைய சகலநிலை. இதில் நம்மறிவும் இச்சையும் பரமனருளால் விளங்கவருகின்றது.

முழுக்கல்லும்தீட்டிச் சுத்தப்படுத்தியபோது, முழுச்சோதியும் உட்கலந்து ஒரேவெளிச்சமாய், கல்லும் அதில்மறையும். இதுதான் சுத்தநிலை அல்லது வீட்டுநிலை. அழுக்குமூடியபோது பந்தம். அழுக்கற்றபோது வீடு. இந்நிலை அழுக்கற்றநிலைமட்டுமன்று. ஒளியும் உட்பதிகின்றது. அது தான் சுவாநுபூதி, சிவாநுபூதி. வயிரக்கல்லை, அவ்வளவு சுத்தப்படுத்தியும், அதிற் பிரகாசமில்லாவிட்டால் அதனை யாவரேனும் விலைமதிப்பரோ? மதியாரென்பதே திண்ணம். நாம் சுத்தமடைவதும் அவன் ஒளியை அனுபவிப்பதற்கே. தெய்வீகம்பொருந்திய அருணகிரிநாதரும் இவ்வுண்மையை எவ்வளவு எளிதாகவும் நுண்மையாகவும் நமக்கு உபதேசிக்கின்றார்.

---

* பட்டைதீர்த்தவயிரம் பட்டைக்கண்ணாடியைப்போன்று ஒளியைப் பலவர்ணங்களாகப்பிரிக்கும். தூய்மையானநீருக்கும் இந்தச்சக்தியுண்டு. (ஆங்கிலத்தில் பளிங்குநீர் என்றே சொல்வது.) இந்நீர் ஒளியின்வர்ணங்களைப்பிரிப்பதை மகாநந்திக்ஷேத்திரத்திலுள்ள தீர்த்தத்திற்பார்க்கலாம்.

"தூசாமணியுந்துகிலும்புனைவாள்
நேசாமுருகாநினதுஅன்புஅருளால்
ஆசாநிகளந்துகளாயினபின்
பேசாஅநுபூதிபிறந்ததுவே."

திருமூலதேவநாயனாரின் திவ்யமொழிகளையும் சிந்திப்பாம்.

"உறையற்றதொன்றையுரைசெய்யுமூமர்காள்
கரையற்றதொன்றைக்கரைகாணலாகுமோ?
திரையற்றநீர்போல்சிந்தைதெளிவார்க்குப்
புரையற்றிருந்தான்புரிசடையோனே."

ஆசையறுதலும், சிவாநுபூதிபிறத்தலும், சிந்தைதெளிதலும் பிறப்பிலிப்பிஞ்ஞகன்தேசோமயம்பிரகாசித்தலும் ஓர்ந்துணர்க.

மணியின்தூய்மையையும், நீரின்நிர்மலத்தையும் நாம் அவாவுகின்றோம். இயற்கைப்பொருள்களிலுள்ள எல்லாநலத்தையும் நாம் நச்சுகின்றோம். புருஷன் மனைவியையும், தந்தை பிள்ளைகளையும் ஏன் நேசிக்கவேண்டும்? நாம்அவைகளை இச்சிப்பதும் அவைகளின் பொருட்டோ? அப்படியானால், நம்முடையகட்டும் வலுப்படும். பொன்னிலும், பெண்ணிலும் நம்ஆசை மேலும்மேலும்அதிகரிக்க, அதைத்தேடுதலிலேயே நம்மறிவு ஆழ்ந்து அழுக்குப்படும். அவற்றின் அழகையும் ஒளியையும் அன்பையும்தரும் பரமேஸ்வரனது அருளை நாம்அவாவுவதாக எண்ணும்பக்ஷம், அவைகளிலே மனம்பற்றாது அவனிடம் பற்றுண்டாகுமன்றோ? உண்டாகவும் நாம்விரும்பும் வீடும் எளிதன்றோ?*

---

*பின்வரும் பிருஹதாரண்யகசுருதிகளின்பொருளும் இதுவன்றோ?

"அவனை இச்சிக்கும்பொருட்டன்று, ஒருபுருஷனும் உனக்கு உவப்பாக இருப்பதும். உன்தேவனை இச்சிக்கும்பொருட்டே உன்புருஷனும் உனக்கு உவப்பாயிருப்பது"

"அவளை இச்சிக்கும்பொருட்டன்று, ஒருமனைவியும் உனக்கு உவப்பாயிருப்பதும். உன்தேவனை இச்சிக்கும்பொருட்டு உன்மனைவியும் உனக்கு உவப்பாயிருப்பது."

"உன்மக்களை இச்சிக்கும்பொருட்டன்று, அவர்கள் உனக்கு உவப்பாயிருப்பதும். உன்தேவனை இச்சிக்கும்பொருட்டு, உன் மக்களும் உனக்கு உவப்பாயிருப்பது."

"உன்பொருளை இச்சிக்கும்பொருட்டன்று, உன்பொருளும் உனக்கு உவப்பாயிருப்பதும். உன்தேவனை இச்சிக்கும்பொருட்டு, உனக்குப் பொருளும் உவப்பாயிருப்பது."

மேலும், கல்லினழுக்கோ உயிரினழுக்கோ, அவைகளை ஊடுருவிச்செல்வதன்றென நாம் ஈங்கு உணரவேண்டும். அப்படியானல், அவ்வழுக்கு என்றும் நீங்காது. முதலிலேயே, மனிதன் அறிவிலியும் அசுத்தனுமாகி, படிப்பினுலும் பழக்கத்தினுலும் பலபிறப்பினுலும், மேலும்மேலும் அறிவையும் சுத்தத்தையுமடைகின்றுனில்லை. அவன் அறிவு இச்சை தொழிலாகிய எல்லாச்சக்திகளும் அவனிடம் அன்றேயிருந்தது. ஆயின் அச்சக்திகளெல்லாம் மாயை ஆணவம் எனும் திரையினுல் மூடப்பட்டிருந்தது. அத்திரைநீங்கவே, தன்னறிவு தனக்குத்தோன்றித் தான் எல்லாமாயிருத்தலைக்கண்டு (ஆத்மதரிசனம்) உடனே ஆநந்தத்தாண்டவம்புரியும் நம் நடேசனைத்தரிசித்து (ஆருத்ராதரிசனம் - சிவதரிசனம்) அவனடிக்கீழ் ஆழ்கின்றுன். இப்பாகுபாடு முக்கியமானது. ஏனெனில், மேலைநாட்டுத் தத்துவஞானத்துக்கும் நம் இந்தியநாட்டு ஆன்மஞானத்துக்கும் உள்ள வேறுபாடும் இதுவாதலின்.

இந்தக் காரணத்தினுல்தான் ஐரோப்பிய சிருஷ்டிலயதத்துவ ஞானம் (Theory of Evolution) பிழைபடுகின்றது. மேற்படையெல்லாம் சரியே, அடிப்படை அவ்வளவும் பிழை. இதன்படி மனிதனுடைய ஒவ்வொருசக்தியும் கொஞ்சம்கொஞ்சமாகச் சனனச்சுழற்சியாலும், ஏற்பன ஏற்றலாலும், மேலது நிலையுறுவதாலும் உண்டாகிப் பலப்படுகின்றதென்பதே. ஆயின் நம்மவர்கூற்றே, மனிதனுடைய எல்லாச்சக்தியும் அன்றே ஆங்கிருந்தது. அவன் சச்சிதானந்தன். அவன் சக்திகள் மூடப்பட்டிருந்தன. இறைவன் பஞ்சகிருத்தியமும், இறப்பும் பிறப்பும், அவன்மறைப்பை நீக்குவதற்காகவே ஏற்பட்டன. இத்திரைநீங்கவே, அவன் உண்மைபுருவமடைகின்றுன்.* இங்கும் இன்னமொரு எச்சரிப்பு நாம்செய்யவேண்டும்.

உயிர் தன் முழு இச்சாஞானக்கிரியைகளைப்பெற்று, சச்சிதாநந்தமடைவது உண்மையே. ஆயின் இவ் விச்சையாதிகளையும்,

*இவ்வுண்மை, கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பீயர் முதலியவர்கள் அரும் புலவர்களானதை நிலையுறுத்தும். ஐரோப்பியஞானத்தின்படி இயலாது. ஒவ்வொருவருடைய மூளையிலும் இயற்கையமைப்பும் உண்மையும் என்றும் பதிந்துகொண்டுதானிருக்கிறது. வலியின்மையாலும், அறியாமைமறப்பினுலும் அவற்றை எடுத்துச்சொல்லவும் வர்ணிக்கவும் முடியாமையாகிறது. தெய்வ அருளினுல், இத்திரைநீங்கப்பெறவும், அவர்கள் வன்மையுடையவர்களாகிறுர்கள். உள்ளதே தோற்றும். இல்லது வாராது.

சச்சிதாநந்தத்தையும், இறைவனுடைய இச்சையாதிசக்திகளையும், பகுத்துணரவேண்டும். இங்கே, உபநிடதங்களில், விடுபட்ட உயிரின் உயர்வைப்பற்றிப்பேசும் சுருதிகளைத் தப்பாகப்பொருள் கொண்டு, உயிருக்கும் கடவுளுக்கும் ஏகத்வம் சாதிக்க எண்ணுகிறார்கள். உயிரும் இறைவனும் ஒன்றுபட்டாலும், பந்தமறுத்தஉயிரிற்காணப்பட்டது பரமாத்மாவின் தேசோமயமாகி, ஆன்மாவும், அவன்பரமானந்தத்தில்திளைத்து அவனடிக்கீழ்த் தானதுவாகுந் தன்மையாற் சார்கின்றது. ஆங்கு, உயிர் பரமசுகமடைகின்றது என்பது உண்மை. ஆயின், அது தானடைந்தேன் என்று முனைத்து உணராது. அங்கே அது காணாமற் காண்கின்றது. கேளாமற் கேட்கின்றது. முகராமல் முகருகின்றது. சுவையாமற் சுவைக்கின்றது. நினையாமல் நினைக்கின்றது. 'நான்' என்னும் ஞானம் ஆங்கு உதயமானால், ஏகத்வம் நசித்துப் பரமசுகமுமற்றுப்போம். இதுவன்றோ பேர்போன பிருஹதாரண்யகசுருதியின்பொருள்.

"ஆங்கு அவன் நோக்கவில்லை. ஆயினும் அவன் நோக்குகின்றான், நோக்காமல்நின்றானாயினும் காண்கின்றவனுடன் காட்சி வேறன்மையாதலாலும், அது நசிக்கமாட்டாதாதலாலும், ஆயினும் ஆங்கு இரண்டாவதொன்றில்லையே. தன்னைவிட வேறாகக்காண்பதற்கு வேறுபொருள் இல்லையே." IV. 3. 23.

இந்தநிலையை மோக்ஷமூலபண்டிதர் சுழுத்தி அவஸ்தையென்றார்; துரியம் துரியாதீதம் உள்பட எல்லாஅவஸ்தைகளையும் கடந்த நிலை ஒன்று உளதென அவர்அறியாமையால். 21-வது மந்திரத்தில், ஆங்குத் தனக்கு உள்ளும்புறம்பும் ஒன்றையும் அறிந்ததில்லை என்று சொல்லியதில் உண்டாகும் மயக்கத்தைத்தீர்க்கவே இந்தச்சுருதியும் எழுந்தது. ஒன்றும் அறியாதபக்ஷம், சூன்யகேவல அவஸ்தையாகும். அற்றன்று. ஆங்குப் பூரணஅநுபவமுண்டு. காண்பதுமுண்டு. கேட்பதுமுண்டு. ஆனால் நான் அறிந்தேன், கண்டேனென்ற ஞானமில்லை. தலைவன்தலைவி யின்புறுதல் எல்லாச்சித்தாதி யோகிகளுக்கும் முக்கிய உதாரணம்.

உய்யவந்ததேவநாயனாரும் தம் திருவுந்தியாரில், இச்சுருதியையே விளக்கியுள்ளார்.

"பெற்றசிற்றின்பமேபேரின்பமாயாங்கே
முற்றவரும்பரிசுந்தீபற
முளையாதுமாயையென் றுந்தீபற"

"பேரின்பமானபிரமக்கிழத்தியோ
டோரின்பத்துள்ளானென் றுந்தீபற
உன்னையேயாண்டானென் றுந்தீபற"

பின்னர்க்காட்டப்படும் 21 மந்திரத்தோடு இவற்றை ஒத்திட்டுப்பார்க்க.

"ஆசை, கேடு, பயம் அற்ற (உண்மைச்) சொரூபம் இதுவே. ஒருவன் தன்காதலியைக்கூடினபோது, உள்ளும்புறம்பும் எப்படி அவனுக்குத்தெரியாதோ, அவ்விதம், வாலறிவன் இவனை அணைந்த போது, இவனுக்கு உள்ளும் தெரியாது. புறம்பும் தெரியாது. இது தான் அவன் உண்மைச்சொரூபம். அதில் அவன் எல்லாவிருப்பும் நிறைவேறப்பெற்றது. அதில் அவன்விருப்பும் இறைவனே. ஒன்றும்விடுபட்டதில்லை. துயரற்றது அதுவே."

இதன்பொருளும் இது. தான் அதுவாய், தன்னெல்லாக்கரணங்களும் அழிந்து அன்புமாத்திரையாய்நிற்பதுதான் சிற்றின்பத்திலும் முற்றின்பம். தாய்தந்தைகள் எவ்வளவோ அறிஞர்களாயும், தூயவர்களாயுமிருந்தாலும் பிள்ளைகள் மூடர்களாகவும், ஏழையறிவுடையவர்களாகவும், தீயகுணமுடையவர்களாகவுமிருப்பதின்காரணம், அவர்கள் இவ்வண்ணம் மனமற்று அனுபவியாதது என்கிறார்கள். அதுவதுவாகாததனால், அவர்களுடைய நற்குணங்கள் பிள்ளைகளுக்கு ஏறவில்லை. குடியர்களுடைய பிள்ளைகளும் இவ்விதமே. இதேவண்ணம்தான் பேரின்பத்தைநுகர்வதிலும் சொல்லியிருக்கின்றது. ஆங்கும் அதுவதுவாகவேண்டும். கரணங்கள் எல்லாம் ஒய்கின்றது. பரமாநந்தப்பழஞ்சுடரில் நாம் மூழ்குகின்றோம்.

இவ்வியல், தமிழகப்பொருளிலக்கணத்திற் காணப்படும். ஸ்ரீமத் மணிவாசகப்பெருமானின் திருக்கோவையார் இதற்குச் சிறந்தஇலக்கியம். ஸ்ரீமத் தாயுமானசுவாமிகளின் ஆநந்தக்களிப்பை நுகர்ந்தோர் இதனைஉணர்ந்தோராவர்.

நோக்காதுநோக்கல், கேளாதுகேட்டல், நினையாதுநினைத்தல் என்ற சொற்றொடர்கள் சுட்டறவுணர்தல் என்னும் பான்மைத்து. நம் சாதாரணஅறிவில், நான் அது என்ற காண்பானும் (subject) காட்சிப்பொருளுமாகிய (object) இருவித அறிவுநிகழும். சுட்டறவுணர்தலில் இரண்டற்று, காண்பான் காட்சிமுதலிய ஒன்றாய், ஆநந்த மாத்திரையேயாகி, அறிவு அடங்கிநிற்கும். கடவுளைச் சுட்டுப் பொருள்போல் உணர்ந்தால், அதுவும் சடப்பொருளாய் ஒழியுமன்றோ? சுருதியும் நம் சித்தாந்தநூல்களும் பின்வருமாறு முழங்குகின்றனவன்றோ?

"இவற்றையெல்லாம் எவனால் அறிந்தானோ அவனை எப்படி அறிவது? அறிவிப்பானை இவன் எப்படியறிவது." (பிருஹதா II. 4. 13.)

"நீ காட்சியைக்காண்பானைக் காணமாட்டாய். ஓசையைக்கேட்பானை நீ கேட்கமாட்டாய். சிந்தனையைச் சிந்திப்பானை நீ சிந்திக்கமாட்டாய். அறிவை அறிவானை நீ யறியமாட்டாய். இதுவே எல்லாவற்றுள்ளும் உன்னுள்ளும் உள்ள பரமாத்மா." (Do. III. 5. 2.)

"அன்னியமிலாமையானும்அறிவினுள்நிற்றலானும்,
முன்னியவெல்லாமுண்ணின் றுணர்த்துவனாதலானும்
என்னதியானென்றேதுமிருஞ்செருக்கறுத்தலானும்
தன்னறிவதனாற்காணும்தகைமையனல்லனீசன்"

(சிவஞானசித்தி. VI. 8.)

முடிவில் நாம்சொல்வது, இதுகாறும் கூறிப்போந்த இச்சிவலக்ஷணம் அறிஞர்யாவரும் விதந்து ஒப்புக்கொள்ளத்தக்கதென்பது தான். என்றாலும், சென்ற 50 வருடங்களுக்குள் கிறிஸ்தவமதத்தையே சீர்படுத்தியவராகக்கூறும், காலஞ்சென்ற ஹென்றிடிராம்மண்டு பண்டிதரைச் (Professor Henry Drummond) சான்றாகக் கூறுவோம். அவர்எழுதிய 'மறுவாழ்வு' (Changed Life) என்னும் அரியநூல், மெய்கண்டநாதருடைய 'அதுவதுவாதல்' என்னும் சொற்றொடருக்கு அரிய விருத்தியுரையாகும். அவர் மேற்கோளாகக் கொண்டது பால்அபோஸ்தலர் வாக்கியங்களில் ஒன்று.

"நாம்யாவரும், நம் முகத்திரையைநீக்கியபின் கண்ணாடியைப் போலும், இறைவனுடையமகிமையைப் பிரதிபலித்துச் சத்துப்பொருளாகிய இறைவனைப்போல அவன் மகிமைஉருவோடும் மீண்டும் மீண்டும் ஒன்றாகின்றோம்."

அதைப் பின்வருமாறு விரிக்கிறார். "பளிங்கைப் போலும், நாமெல்லாம் கிறிஸ்துநாதரின்குணாதிசயங்களைவிளக்கி, அவர் உருவைப் பையப்பைய அடைகிறோம்; அற்பகுணத்திலிருந்து அதற்கு உயர்ந்தகுணத்தையும், அதனினின்று அதற்குமேலான குணத்தையும், அதற்குமேலும் பூர்ணகுணத்தையும் அடைந்து, கடைசியாக, அவன்முழு உருவையும் பெறுகின்றோம். ஆகவே, முக்திசாதனத்தை ஒருவரியில் அடக்கலாம். கிறிஸ்துவின் குணத்தைப் பிரதிபலி. நீ கிறிஸ்துபோல் ஆவாய்" அல்லது நாம்சொல்லுகிறபடி, கடவுளின்உருவை உன்னிடத்திற்பதியவை. நீ கடவுளைப் போல் ஆவாய். நீ கடவுளாவாய்.

ஆனால் யாங்ஙனம், அற்பகுணம், மேலும்மேலும் நற்குணமாவது? அல்லது கண்ணாடியிற்பதிந்த உருவம் மேலும்மேலும் தெளிவது? ஆன்மாவாகிய பளிங்கை அழுக்கற மேலும்மேலும் துலக்கி, பரஞ்சோதியின்நேராகக்கொண்டுவருவதினால்தான். ஆக அதுமுற்றும் சுத்தமாகத் துலக்கப்பட்டபின்னும், சோதிக்கு அணுகி நேர்ந்த பின்னும் அதனுட்பதிந்தசோதி ஒப்பற்றஒளியாம். அதனை முற்றும் கவர்ந்து, அதனைமறைத்து, அப்பாலொளியே அநுபவசித்தமாகின்றது. அப்பண்டிதரும் உண்மையில் உரைக்குமாறு, "சாதனசித்திஉண்மையாயின், நீ உணர்வதும் இறைவனுடையமகிமையே. ஒரு கண்ணாடியை ஒருவன் பார்க்கும்போது, அந்தக்கண்ணாடியைப் பார்ப்பதுமில்லை நினைப்பதுமில்லை; அதில் என்ன ஒளிர்கின்றதோ அதனையே பார்க்கின்றான். ஏனெனின், பளிங்கிற் குற்றமிருந்தாலொழிய அதனிடம் நம்கவனம்பதிவதில்லை." இக்குற்றங்களும்,சித்தாந்திகளுடைய பாசமாகிய பலவன்னங்களே. உடலோடுபொருந்தியபோது உடல்தான் காட்சி. பளிங்குபோலும் உயிரன்று. இறைவனுடன்கலந்தபோது, இறைவனுடையமாட்சியும், நிர்மலப்ரகாசமுமே காட்சி. பளிங்குபோலும் ஆன்மாவல்ல. அப்பண்டிதர் பகர்வதும், "எல்லா மனிதர்களும் கண்ணாடிகள், இதுதான் முக்திசாதனம் அல்லது பந்தசாதனத்தின் முதல்விதி; மனிதனுக்கு மிகவும்நேர்ந்த உபமானமாகக் கிடைத்திருப்பது, அவன் கண்ணாடிபோன்றவன் என்பது." அந்நூலை முற்றும்பார்க்க எவ்வளவுஅழகாய் இதனைவிரித்திருக்கிறாரென்பது வெளிப்படும்.

அவர் இரண்டாவதுவிதியாகக்கூறுவதும் அதுவததுவாதல், அல்லது தாதாத்மியமாதலே. "அதுவததுவாதல் இரண்டாவதுவிதி. இது முக்திசாதனத்துக்கு முக்கியஅடிப்படை. மனிதர் வெறுங்கண்ணாடிகளல்லர். இக்கண்ணாடி தன் எதிர்ப்பட்டதைப் பிரதிபலிப்பது மட்டுமல்லாமல், தான் பிரதிபலித்ததை, தன் உள்ளுக்குள் உள்ளாக்கி, தான் அதுவாய், அதனை என்னும்விடாமல், பற்றிக்கொண்டே நிற்கின்றது. எங்ஙனம் இவ்வான்மா அவற்றைப்பற்றிக்கொண்டிருப்பதென்பதும், இவ்வித அற்புதம் எங்ஙனம் விளைகின்றதென்பதும் நமக்குப்புலப்படவில்லை. இயற்கைத் தோற்றங்களில் எதுவும், ரசாயனப் பரீக்ஷையில் எதுவும், மாந்திரிகதந்திரங்கள் எதுவும் இவ்வதிசயத்தை விளக்குவதில்லை. பாருங்கள், இறந்தகாலநிகழ்ச்சியெல்லாம் அவனிடம்பிரதிபலிப்பதுமல்லாமல், எல்லாம் அவனிடத்தேயுள்ளனவாகின்றன. உள்ளதன்றேல் யாங்ஙனம் தோற்றும். அவன் இதுவரை இப்பூவுலகின்கட் கண்டதும், கேட்டதும், உணர்ந்ததும் நம்பியதும் அவனுள்ளே இப்பொழுது குடிகொண்டிருக்கின்றன. அவன்பகுப்பாய் ஆய்விட்டன, பாதிஅவனே ஆகின்றான். அவன் அவ்வுருவாயினான்."

பண்டிதர்விதிகளை அநுசரித்து, சாதனமார்க்கத்தைப் பின்வரும்வாய்பாட்டினா லுரைக்கலாம். "நான் சிவத்தைப்பார்த்தேன். நான் சிவத்தைத்தோற்றுவித்தேன். சிவம்போல்ஆனேன். நான் சிவமானேன்."

இவற்றையெல்லாம்தொகுத்து ஒருவிருத்தத்திலேயமைத்து உண்மையுரைத்த உயர் அருணந்திசிவாசார்யசுவாமிகளின் உன்னத பாதங்களை எம் உளத்திலும் சிரத்திலும் பொருத்தி இந்நூலை முடிவுசெய்வாம்.

"கண்டவிவையல்லேனானென்றகன்றுகாணாக்
கழிபரமுநானல்லேனெனக்கருதிக்கசிந்த
தொண்டினொடுமுளத்தவன்றானின்றகலப்பாலே
சோகமெனப்பாவிக்கத்தோன்றுவன்வேறின்றி
விண்டகலுமலங்களெல்லாம்கருடதியானத்தால்
விடமொழியுமதுபோலவிமலதையுமடையும்
பண்டைமறைகளுமதுநானானேனென்று
பாவிக்கச்சொல்லுவதிப்பாவகத்தைக்காணே."

சந்தானதாவர்கள்பொற்றாள்வாழ்க.

உ

சிவமயம்.

# அஷ்டமூர்த்தம்.

"அந்தரிக்சந்திதம்ஜனேருத்ரம்பரோமசிஷயா
கிரிஹ்நந்திஜிஹ்வயாசசம்" (இருக்குவேதம்.)

"யாவரும் இலங்கும் ருத்ரரை, அன்புடன் யாவர் தியானிக்கின்றார்களோ அவர்களே அன்னம் புசிக்கின்றார்கள்"

நமது ஆன்றோர்கள் ஒருமொழி அல்லது மொழித்தொடரிலே ஆழ்ந்த தத்துவஞானத்தைப் புகட்டியிருக்கின்றார்களென்பது அதிசயிக்கத்தக்கது.

முன்பெழுதிய சிறுமொழிகளில், யோகம், உபநிடதம், முக்தியல்லது வீடு, உயிர்மெய் என்ற சொற்களை ஆராய்ந்தபோது. எவ்வித உண்மைகள் கடைப்பிடித்தோமென்பது தெற்றென விளங்கிற்று. அவ்வண்ணம், இன்று ஆராயப்புகுந்ததும் இன்னொரு சொற்றொடர்.

'அஷ்டமூர்த்தி' என்றது எட்டுருவை யுடையவன் என்னும் பொருட்பட்டு ருத்ரசிவனுக்குப் பெயராயிற்று. இவ்வெட்டுருவம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திரன், சூரியன், உயிர் அல்லது ஆன்மா.

இவ்வெட்டுருவில் எல்லா உயிருள்ளனவும் இல்லனவுமாகிய உலகம் (சேதன அசேதனப்பிரபஞ்சம்) அடங்கும். ஆதிபகவானாகிய கடவுள்மட்டும் இவற்றுள் அடங்க வில்லை. அஷ்ட மூர்த்தம் என்னும், எட்டுருவம் அவன் திருமேனி யாகக்கூறும் பொழுது, இறைவனுக்கும் நமக்குமுள்ள சம்பந்தம் உயிர் உடல் சம்பந்தமாகக் காண்கின்றோம். இவ்வுயிர் உடல் இயல்பை முன்பே விரித்திருக்கின்றோமாகயால், ஆங்கு அதனை யோர்ந்துணர்க.

உடலில் உயிர்போல் அவன் எங்கும் வியாபித்திருத்தலால் அவனை 'விஸ்வாந்தர்யாமி' யென்று கூறப்பட்டது. அதற்கு மேற்

கோளாக, இருக்குவேதமந்திரம் ஒன்று மேலேகாட்டியிருக்கின்றும். உபநிடதங்களினும் இக்கருத்தே ஏராளமாக பற்பலவிடங்களினு காணப்படும். இவ்வுலகமே அவனுக்கு உருவாகின்றதால், அவனே 'விஸ்வஸ்வரூபி' என்றழைக்கப்படுகின்றது.

"விஸ்வரூபாயவிநமோநம:"

(யசுர் வேதம்.)

உலகமெல்லாம் தன்னிடமிருந்து தோற்றுவித்தலால் "விஸ்வ காரணன்" என்றும், 'விஸ்வயோனி' என்றும் இறைவன் அழைக்கப் படுகின்றுன். நம்முடலை நாமாகபாவிப்பதுபோல், கடவுளையும் உலகமாகவே பாவிக்கப்பட்டு, அவனை நிலம் முதல் உயிர் ஈருகிய எட்டாகவும் அழைக்கப்படுகின்றது.

ஆயின் இவ்வெட்டுருவாகிய சேதன அசேதனப்பிரபஞ்சத்தில் இவன் ஒன்றல்லன் என்பது அநேகவிடங்களில் தெற்றெறன விளங்கு கின்றது. உபநிடதங்களில், நிலம் நீர் முதலிய உயிரில்லவற்றைக் கடவுளாகப்பேசுங்கால் ஒருவரும் இந்நிலம் நீர்முதலியனதான் கடவுள், அவைகளை உள்நின்று இயக்கும் ஈசனுக பிருகதாரண்ய உபநிடத்தில்பேசப்படும் இறைவன் அல்லன்என சாதிக்கமுயலார்கள். ஆயினும் ஆன்மா கடவுளாக கூறிப்போந்த மந்திரங்கள் அதிக மயக்கந்தருவதாய், நம்மிந்திய தத்துவஞானிகளில் ஒருசாரார் அவ்வாக்கியங்களை தங்களுக்கு முக்கிய ஆதரவாகக்கொள்கின்றூர்கள், அப்படியல்லவென ஏராளமான மந்திரங்களிருந்தும். இவ்வெட்டுமல்லவாகி யாவற்றையும் கடந்துநிற்பதனுல், ஈசனை 'விஸ்வாதிகன்' என்று மறைகள் முழங்குகின்றன.

யாதேவானாம்பிரபவச்சோற்பவச்சுவிஸ்வாதிகோருத்ரோமகர்ஷி:
ஹிரண்யகர்போபச்யதஜாயமானக்ஸநோபுத்யாசுபயாஸம்புநக்து.

சுவேதா IV. 12 III 4.

"எத்தேவன் மூலமும் உத்பத்தியுமாயிருக்கிறனே, விஸ்வாதிகனே, ருத்ரனே, மகரிஷியோ, ஹிரண்யகர்ப்பன் பிறப்பைக்காண்கின்றனே அவன் நமக்கு நல்ல அறிவைக்கூட்டுக."

"ஏதோவாநாமதிபோ,யஸ்மிந்லோகா அதிச்ரிதா:
யஈசே அஸ்யத்விபதச்சதுஷ்பத: கஸ்த்மேதேவாய
ஹவிஷாவிதமே. IV. 13.

"எத்தேவன் அதிபனே, எவனிலிவ்வுலகம் நிலைபெற்றிருக்கிறதோ, இருகால் நாற்கால் சீவர்களுக்கு எவன் ஈசனே, 'க' எனும் பெயரையுடைய அத்தேவனுக்கு, நாம் அவிர்ப்பாகம் கொடுப்போமாக"

இம்மந்திரங்கள் முன்வரும் மந்திரத்துக்கு முன்னிற்பதின் இயல்பையும் கவனிக்கத்தக்கது.

"அதுவே அக்னி, அதுவே ஆதித்யன், அதுவேவாயு, அதுவே சந்திரன், அதுவே சுக்ரன், அதுவே பிரமம், நீரும் அதுவே, பிரஜாபதியும் அதுவே."

இதற்கு மூந்தின அத்யாயத்தில், "எது உத்தரதரமாயிருக்கின்றது; அது அரூபம் அநாமயம்."

"அத்தேவன் எல்லாத்திசைகளுமாயினன். பூர்வத்திலே அவன் பிறந்தான். இப்பவும் உண்மையில் கர்ப்பத்திலிருக்கிறான் அவன் பிறந்தான், பிறக்கப்போகிறான். பிறந்தவர்களுக்கெல்லாம் பின் நிலைத்திருக்கின்றான், அவன் முகம் எங்குமாகி." (II. 16.)

பிருகதாரண்ய உபநிடதத்தில் பேர்போன 5-ம் அத்தியாயம் ஏழாம் பிராம்மணத்தில் இவ்வட்ட மூர்த்தியின் விவரணத்தை முழுதும் காணலாம்.

மூன்றும் மந்திரத்தில் நிலம் அவன் சரீரமாகக் கூறப்பட்டு பின் வருமாறு பேசுகின்றது.

யः பிரிதிவியாப்திஷ்டன் ப்ரிதிவியா அந்தரோயம் ப்ரிதிவீந வேதம், யஸ்யப்ரிதிவீசரீரம்.

யஃ ப்ரிதிவீமந்தரோய மயத்யேஷத் ஆத்மாந்தர்யாமி அமிர்தம். V. 7, 3.

"எவன் நிலத்தில் வசிக்கின்றானே, எவன் நிலத்தின் உள்ளிருக்கின்றானே (அல்லது நிலா அல்லேயோ,) எவனை நிலம் அறியவில்லேயோ, எவனுக்கு அந்நிலம் சரீரமோ, எவன் அந்நிலத்தை உள்ளிருந்து இயக்குகின்றானே, அவன் உன் ஆத்மா, அந்தர்யாமி அமிர்தன்."

இம்மாதிரியே, 4, 5, 7, 9, 11, 12, 22-ம் மந்திரங்களில் நீர், நெருப்பு, கால், சூரியன், சந்திரன், ஆகாசம், விஞ்ஞானம் என்பவை முறையே அவன் உடலாகக்கூறுகின்றது. 22-வது மந்திரம் வருவது.

"யே விஞ்ஞானதிஷ்டன் விஞ்ஞான தந்தரோயம். விஞ்ஞான நவேதயஸ்ய விஞ்ஞானச்சரீரம் யே விஞ்ஞான மந்தரோய மயத்வேஷத் ஆத்மந்தர்யாமியமிர்தம்.

"எவன் விஞ்ஞானத்தில் நிலைத்திருக்கின்றானோ, எவன் விஞ்ஞானத்தின் உள்ளிருக்கின்றானோ (அல்லது விஞ்ஞானமல்லவோ) எவனை விஞ்ஞானம்அறியவில்லையோ, எவனுக்கு விஞ்ஞானம்சரீரமோ எவன் விஞ்ஞானத்தை உள்ளிருந்து இயக்குகின்றானோ அவன் உன் ஆத்மா, அந்தர்யாமி, அமிர்தன்.

இங்கு, விஞ்ஞானம் என்பது அறிவு என்று பொருள் படினும், மத்யாந்தின சாகைப்படியும், பிரம்மசூத்திரம் சமானப்பிரகாணத்தில் எடுத்து ஓதப்பட்டபடியும் மூலத்தில் 'விஞ்ஞானம்' என்னும் சொல்லுக்குப்பிரதிபதம் 'ஆத்மா' என்றே காணப்படுகின்றமையாலும், விஞ்ஞானம் என்றதற்கு சரியானபொருள் ஆத்மா என்றே கொள்ளக்கிடக்கின்றது. முன்னர் நாம் காட்டும் உபப்பிருங்கண வாக்கியங்களாலும் அதன் பொருள் அதுவே என நிச்சயிக்கக்கூடும்.

மேற்காட்டிய மந்திரமும் பொருளும் இன்னமொரு பிருகதாரண்ய வாக்கியத்தாலும் உறுதிப்படுகின்றது: கடவுளை "ஆத்மாவில் கண்டுகேட்டு நினைத்து அநுபவிக்கவேண்டும். அவன் ஆத்மாவுக்கு அதீதன், அவனுக்கு ஆத்மாவே சரீரம். அவன் ஆத்மாவை ஊடுருவிப் பிரவேசிக்கின்றான்."

கடவுள் உயிர் அல்லவென்பதற்கு இதினும்விட தெளிவான வாக்கியங்கள் பிறக்கமாட்டா. ஆயின் உயிருக்கும் ஆதியில் பேராயிருந்த ஆத்மாவென்னும் பதம் கடவுளுக்குப்பேராய் வந்தமையால், ஒருவிதமயக்கம் வந்தபடியாகும். அதனாலே, பிற்காலத்து நூல்களில் இவ்விரண்டுவகை ஆத்மாவைப்பிரித்து, ஆத்மா சீவா

த்மா, பரமாத்மாவென்றும் பேசியுள்ளது.* ஆக இவ்வாத்மாவும், ஆத்மாவுமே, நம் உடலாகிய "மரத்தில் வசிக்கின்றன. இவ்விரண்டுமே, "அதிஉன்னததெய்வீக இருப்பிடமாகிய இருதயத்திற் புகுந்தது." இவ்விரண்டுமே, நம் "கண்ணுக்குள் உள்ளாயிருக்கின்றன."

நாம் வேறு இடங்களில், புராண இதிகாசங்களின் முக்கிய கருத்து வேதாகமஉபநிடதப்பொருள்களை விளக்கவேண்டுமென்பதென காட்டியிருக்கின்றோம். உபப்பிருங்கணங்கள் மூலத்தை தன்வாக்கியத்தில் அகப்படுத்தி அதன் பொருளை விளக்கும்

மேலேகாட்டிய இருக்கு மந்திரத்தை பராசரபுராணம் விரித்தவாறு கீழேகாண்க.

"அந்தரிச்சந்தியேருத்ரம்சதாவந்தயம்மனீஷயா
க்ருஹ்ணந்திஜஹ்வயாதேஹிரஸபூர்ணம்ரிதோதகம்
அந்தர்நேச்சந்தியேருத்ரம்பவாநீசஹிதம்சிவம்
புருஷமேவக்ருஹ்ணந்திஜிஹ்வயாதேநசம்சய"

முன்வரும் ஸகாந்தபுராண வசனமும் இறைவன் சீவனில் அந்தர்யாமியாயிருக்கின்றான் என்பதைப் பேசுகிறது.

அந்தர்யாமி அவிஷ சீவானும் பரமேஸ்வர:"

மகாபாரதத்தில், பரமேஸ்வரனுக்கு, இவ்வெட்டும் உருவென்றும், உலகமே அவன் உரு என்றும் இவையெல்லாம் அவன் அல்லவென்றும் ஏராளமான வாக்கியங்கள் காணலாம்.

"உலகமே உன் உரு"

"எவனுக்கு உலகமே அங்கங்களாயுள்ளதோ அவன் நீ"

"உலகில் உள்ள எல்லாசீவர்கள் உன் உரு"

"சீவர்களுக்கெல்லாம் இறைவன் நீ"

---

* கீதை 13, 22-ம் வாக்கியத்தைப்பார்க்க. இதில் காணப்படும் ஒவ்வொரு பதமும், சதசத்தாகிய ஆத்மாவினின்றும் சத்தாகிய ஆத்மாவைப் பிரிக்கின்றது.

"உலகமெல்லாம் எட்டுருவினின்றானாயினும் அவனை எங்கும் காண்பரிது.

"பிரகிருதியையும் புருஷனையும் தன் சக்தியால் இயக்கி, அவற்றினின்றும் பிரசாபதியாகிய பிரமனை சிருஷ்டித்தான்.

"சத்தும் அசத்தும் அவனே"

"பிரகிருதி புருடனைக்கடந்து நின்றான்"

"சத்திற் சத்து என்ற கூறப்படுபவன் நீ"

"பூமுதல் வானவர்களையெல்லாம் உண்டாக்கி அவைகளை நிலைக்கச்செய்து காக்கின்றாய், பேர்போன எட்டுருவில் பிரவேசித்து."

காளிதாசமகாகவியும், சாகுந்தல நாடகத்தின் நாந்தி சுலோகத்தில் பின்வருமாறு போற்றுகின்றார்.

"சிருட்டியின் முதலாம் அப்புவேயாயும்
வானவர் தமக்குவிதிமுறைஈயும்
அவிசுமேற்கொண்டெழும் அனலேயாயும்
அவ்வவிசுக் கொடுக்கும் இயமானனையும்
இருபொழுதியக்கிருமண்டிலமாயும்
ஒலிக்கிடமாயுள உயர் விண்ணாகியும்
உலகியற் பொருளெலாம் உதிக்குமிடமென
பாவலர் போற்றும் பரந்தபாராயும்
உயிர்ப்பனவாகிய எல்லாவுயிர்க்கும்
உயிர்ப்பைக்கொடுக்கும் உயிரேயாயும்
எவனவனட்ட மூர்த்தமாயிலங்கி
இருக்கும் ஈசன் இயல்புறக்காக்க.

ஈசன் எட்டுருவில் நிலைத்தலால் அவனுக்கு எட்டு நாமங்கள் பேசப்படுகின்றன.

"பிரிதிவியோபவ: ஆபச்சர்வ: அக்நேருத்ர: வாயுர்பீம: ஆகாசஸ்ய மகாதேவ: சூர்யஸ்யோக்ர: சந்திரஸ்யசோம: ஆத்மான: பசுபதி:"

நிலத்தில் நிற்குங்கால் அவன்பேர் பவன். நீரில், சர்வன், அக்நியில் ருத்ரன், காற்றில் பீமன், ஆகாயத்தில் மகாதேவன், சூரியனில், உக்கிரன், சந்திரனில் சோமன், ஆத்மாவில் பசுபதி.

ஹோத்திரி, யசமான் (இயமானன்) யாகத்தில் கர்த்தாவாயிருந்து தன்னையே பலிகொடுக்கின்றவனுக்குப்பேர். இவனே பசு, மேதம், சீவன், ஆத்மா. ஆகவே இப்பெயர்களெல்லாம் ஒருபொருட் பன்மொழி. ஈசனும், பசுபதி, மேதபதியாகின்ருன்.

மகாபாரதத்தினின்றும் இன்னும் சில வாக்கியங்கள் காட்டுவோம்.

"எட்டுப்பிரகிருதியும் நீ, எட்டுப்பிரகிதிருக்கு அப்பால் நின்றவனும் நீயே. உள்ளது எதுவோ அதுவெல்லாம் உன் திவ்ய ஆத்மாவின் ஒருபாகம்.

முன்வரும் வாக்கியம், கடவுள் என் இவ்வெட்டுருவிற் புகுந்து தன்னை விரித்துக்கொள்ளவேண்டும், ஏன் இவ்வுலகை முத்தொழிற் படுத்தவேண்டும் என்பதைக்காட்டும். அதுவும் சம்ஸாரம் நிலைபடவேண்டுமென்ற அவசியத்தினுல் அல்ல (டாய்சன்பண்டிதர் கூறுவது); தான் (கடவுள்) தான் உயிர்த்து சுகிக்கவேண்டுமென்று எழும் இச்சையால் அல்ல; தன் உருவை பிரதிபலிக்கச்செய்து அதனைப்பார்க்கவேண்டுமென்கிற ஆசையாலல்ல; தன்னை விருத்தி செய்து உயர்த்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தினுலல்ல; மற்றென்னெனின், மாசுபடிந்தஉயிர் உய்யும் பொருட்டே இவ்விதம் இறைவன் தொழிற்படுவதும் தொழிற் செய்வதும்.

"ஓ கேசவனே இதையறியக்கடவாய். இந்த சேதன அசேதனப் பிரபஞ்சமெல்லாம், அவற்றிலுள்ள வானும் இன்னும் காணப்படாத பதார்த்தங்களெல்லாம், இவற்றிற்கெல்லாம் உயிராயுள்ள எங்கும் நிறைந்த மகேஸ்வரனின்றும் தோற்றியது, அவனுல் உண்டாகப்பட்டது சீவன் புசிக்கும்பொருட்டே."

உயிர் கேவலத்தில் செயலற்று இச்சையற்று அந்தகாரத்தில் முழுகி நின்றது. பரமேஸ்வரன் தன் அருட்சத்தியின் முகமாய் உயிர் உய்வடைய வேண்டுமென்று, இச்சாசக்தியின் முகமாய் தொழிற்படுத்தக்கருதி, கிரியாசக்தியின் முகமாய், மாயாசக்தியாகிய பிரகிருதியை இயக்கவும், உயிர் பிரபஞ்சசிருஷ்டியில் படுகின்றது. உயிர் தனுகரன புவனபோகங்களையடைந்து வினையைச்செய்து, அதன் பலனைப்புசித்து அநுபவமும் அறிவும் மேலேறி, நல்லவழி கடைப்பிடித்து, பிறப்பு இறப்பு என்னும் வலையின் நீங்கி, வீடு

அடைய முயல்கின்றது. இவ்விதம் சகலத்தினின்றும் சுத்தநிலேக்கும் போகும். இந்துமத எல்லாசாகைகளிலும், இன்னும் பிறமதங்களிலும், உயிர் மனிதனுகப்பிறந்து சம்சாரத்திற்புகுந்து அறிவடையாதவரை அவன் பிறப்பென்னும் பெருங்கடலே நீந்தமாட்டான் என்னும் உண்மை கட்டாயமாய் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

இச்சிறுமொழியை, திராவிட சுருதிகளிலிருந்து சிலமேற்கோள்களேக்காட்டி முடிவுசெய்வாம்.

"ஊனுய்உயிராயுணர்வங்கியாய்முன்னஞ்
சேனுவானேங்குந்திருவுருவேயண்டத்
தானுவுஞாயிறுந்தண்மதியுங்கடந்
தான்முழுதண்டமுமாகிநின்றுனே."

"எட்டுத்திசையுமடிக்கின்றகாற்றவன்
வட்டத்திரையனல்மாநிலமாகாசம்
ஒட்டியுயிர்நிலேஎன்னுமிக்காயப்பை
கட்டியவிழ்க்கின்றகண்ணுதல்காணுமே." திருமந்திரம்

நம் காரைக்கால் அன்னேயின் அற்புதத்திருவந்தாதி:

அவனேஇருசுடர்தீயாகாசமாவான்
அவனேபுவியனல்காற்றுவான்—அவனே
இயமானனுயட்டமூர்த்தியுமாய்ஞான
மயனுகிநின்றுனும்வந்து."

(சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரம் இறுதியதிகாரணத்தின்கீழ் நம் உரையைப்பார்க்க. இறைவன் ஞானமயனுய் இல்லாவிடின் உலகுயிரோடு பரிபூரணனுய் ஒன்றுபட்டு நிற்பது இயலாது.)

நம் பட்டினத்தடிகள் இவ்வட்டமூர்த்தத்தை அதிக விரிவாக எடுத்துப்புகழுகின்றூர்:

இருநிலமடந்தைஇயல்பினினுடுத்த
பொருகடன்மேகலேமுகமெனப்பொலிந்த
ஒற்றிமாநகருடையோயுருவின்
பெற்றியொன்றிப்பெற்றேரியாரே.

பின்னின்பிறக்கந்துன்னுநின்சடையே
மன்னியவண்டநின்சென்னியின்வடிவே
பாவகன்பரிதிபனிமதிதன்னொடு
மூவகைச்சுடருநின் றுதனோர்நாட்டந்
தண்ணொளியாரந்தாரகணமே
விண்ணவர்முதலாவேறோரிடமாக்
கொண்டுறை விசும்பே கோலநின்னாகம்
எண்டிசை திண்டோள் இருங்கடலுடையே
அணியுடையல்குலவனிமண்டலமே
மணிமுடிப்பாந்தள்நின் தாளிணைவழக்கே
யொழியாதோடியமாருதமுயிர்ப்பே
வழுவாவோசைமுழுதுநின் வாய்மொழி
வானவர் முதலா மன்னுயிர் பரந்த
ஊனமில்ஞானத்தொகுதிநின்னுணர்வே
நெருங்கியவுலகினின்நீர்மையுநிற்றலும்
சுருங்கலும்விரிதலும்தோற்றம்நின்றொழிலே
அமைத்தலுமழித்தலும்ஆங்கதன்பெயர்ச்சியும்
இமைத்தலும்விழித்தலும் ஆகும்நின்னியல்பே
என்றிவைமுதலா இயல்புடைவடிவினொ
டொன்றியதுப்புருஇருவகையாகி
முத்திறக்குணத்துநால்வகைப்பிறவி
அத்திறத்தைம்பொறிஅறுவகைச்சமயமோடு
ஏழுலகாகிஎண்வகைமூர்த்தியோடு
ஊழியோழியெண்ணிறந்தோங்கி
எவ்வகையளவினிற்கூடிநின்
றவ்வகைப்பொருளுநீயாகியவிடத்தே."

"நிலநீர்நெருப்புயிர்நீள்விசும்புநிலாப்பகலோன்
புலனாயமைந்தனோடெண்வகையாய்ப்புணர்ந்துநின்றான்
உலகேழெனத்திசைபத்தெனத்தானொருவனுமே
பலவாகிநின்றவாதோணோக்கமாடாமோ."

என்னும் திருப்பாசுரம், என்றும் யாவராலும் திருவாசகத்தினின்றும் எடுத்தோதி புகழப்படுவது.

ஸ்ரீமத் தாயுமானசுவாமிகள் தம் 'அறிஞர்உரை'யில், கீழ்குறிக்கும் அப்பமூர்த்தியின் அருமைத்தேவாரப் பாசுரத்தை விதந்தோதுகின்றார்.

"இருநிலனாய்த்தீயாகிநீருமாகி
இயமானனாயெறியுங்காற்றுமாகி
அருநிலையதிங்களாய்நாயிறாகி
ஆகாசமாயட்டமூர்த்தியாகி
பெருநிலமும்குற்றமும்பெண்ணுமாணும்
பிறருருவும்தம்முருவும்தாமேயாகி
நெருநலையாயின்றாகி நாளையாகி
நிமிர்புன்சடையடிகள்நின்றவாறே"

கீழேவரையப்படும் பாசுரத்தில் நம்மப்பமூர்த்திகள் அண்டாண்டங்கள் எல்லாம் தம்முருவாகிய நம்சிவபெருமான், சிறிதிற்சிறிதாகி நம்மில் எப்படி உறைகின்றான் என்பதைக்காட்டுகின்றது.

"எட்டுமூர்த்தியாய்நின்றியலுந்தொழில்
எட்டுவான்குணத்தீசனெம்மான்றன்னை
எட்டுமூர்த்தியுமெம்மிறைஎம்முளே
எட்டுமூர்த்தியுமெம்முளொடுங்குமே."

திருஞானசம்பந்தமூர்த்திகளின் திவ்யபாசுரம்:

பாருநீரோடுபல்கதிரிரவியும்பனிமதியாகாசம்,
ஓரும்வாயுவுமொண்கனல்வேள்வியிற்றலைவனுமாய்நின்றார்,
சேருஞ்சந்தனமகிலொடுவந்திழிசெழும்புனற்கோட் [டாறு
வாருந்தண்புனல்சூழ்சிரபுரந்தொழுமடியவர்வருந்தாரே."

எம் தாயுமானவரும், மண், வளி, முதலியவற்றை வேதங்கள் பரமேஸ்வரனைக்கூறும்போது, தன்னையுமே அவனாக ஏன் கூறலாகாதெனச் சாற்றுகின்றார்.

"பாராதிநீயாப்பகர்ந்தாலகமெனவும்
ஆராயும்சிவனும்நீயாம்காண்பராபரமே
"வானாதிநீயெனவேவைத்தமறையென்னையு நீ
தானாகச்சொல்லாதோசாற்றாய்பராபரமே.

சிவபெருமானை திக்வஸஸ், திகம்பரன், நிர்வாணி என்றும், சிதம்பரத்தில் தாண்டவம்புரிபவனென்றும் புகழப்படுகின்றது. அவன் உடம்பு அங்கங்களும் உலகப்பகுப்பில் ஒவ்வொன்றாகவும் போற்றப்படுவதையும் மேலேகண்டோம். இதன் பிரகாசத்தை இருக்குவேதம் முதல் உள்ள மூதல்நூல்களிலும் காண்கின்றோம். மகாபாரத ஆங்கிலேயமொழி பெயர்ப்புக்காரர் சிவபெருமானை அநந்த வாக்கியங்களில் பரம்பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவதாக அடிக்கடி குறிக்கின்றார் எக்காலத்திலாவது ருத்ரசிவனும் பரம்பொருளும் வேறாக இருந்தாலன்றோ இப்படிக்கூறவேண்டும். ஓர் உருவும் ஓர் நாமமும் ஒன்றுமில்லாத பரம்பொருளுக்கு ஆயிர நாமங்கள் பேசப்படுவதில், ருத்ரன், சிவன், சங்கரன், சம்பு அரன் முதலிய நாமங்கள் சிறப்பாக ஏற்பட்டதாகவன்றோ நாம் கூறவேண்டும். அவ்வாறனுருவும், உலகமே அவன் உருவாக அமைந்த ஓர் உருவன்றோ?

இங்கு, நம் பரதக்கண்டத்தில் ஏற்பட்ட இறைவன் கோவில்களில் இவ்வட்டமூர்த்தங்களில் ஒவ்வொன்றிற்கும் கோவில்கள் உண்டென்பதை நாம் குறிப்பது அவசியமும் ஆகும்.

மண்ணாக, பரமேஸ்வரன் காஞ்சியில் வணங்கப்படுகின்றான். அப்பாக சம்புகேஸ்வரத்தில்; காற்றாக சீகாளத்தியில்; நெருப்பாகத் திருவண்ணாமலையில்; ஆகாயமாகச் சிதம்பரத்தில், சோமனாக சோமநாதத்தில்; ஆன்மாவாக நேபாள பசுபதி க்ஷேத்திரத்தில்; சூரியனாக, சூரிய நமஸ்காரம் செய்யும்பொழுதெல்லாமும், சூரியனார்கோவிலிலும்.